


புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு


ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2038 செப்டம்பர் 06, 2007 புரட்சி 5 முழக்கம் 36 விலை : ரூ.2.50


## தீண்டாமைக்கு எதிராக களமிறங்கியது, கழகம்

# ஈரோடு மாவட்டத்தில் எழுச்சி

***ஈரோடு மாவட்டம் எலத்தூரில் தீண்டாமை பின்பற்றும் முடித்திருத்தகம் – தேனீர்க் கடை முன்பு – கழகம் நடத்திய பிரச்சார இயக்கம், பெரும் தாக்கத்தை உருவாக்கியுள்ளது.***

கடந்த ஆகஸ்டு 15 ஆம் தேதி ஈரோடு மாவட்டத்தில் கோடி வட்டம் குள்ளம்பாளையம் பிரிவில் வேலன் தேனீர் கடை முன்பு இரட்டைக் குவளை உடைப்புப் போராட்டமும், எலத்தூரில் யுவராஜ் முடிதிருத்தகம் முன்பு அனைவருக்கும் சாதி வேறுபாடு பார்க்காமல் முடிதிருத்தச் சொல்லி போராட்டமும் நடத்த அனைத்து ஏற்பாடுகளும் தயாராக இருந்த நிலையில் தலைமைக் கழகம் போராட்டத்தை தள்ளி வைத்ததால் - நம்பியூர் ஒன்றியம் எலத்தூரில் மட்டும் "சாதி-தீண்டாமை ஒழிப்பு தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம்" என்ற பெயரில் மாற்றம் செய்யப்பட்டு அக்கூட்டம் நடத்தப் பட்டது.



ஆகஸ்டு 15 ஆம் தேதி காலை 11 மணிக்கு எலத்தூர் புதுக்காலனியிலிருந்து ஊர்வலம் புறப்பட்டது. முன்னதாக மாவட்டத் தலைவர் நாத்திகசோதி அங்கிருந்த கழகக் கொடிக் கம்பத்தில் கழகக் கொடியினை ஏற்றி வைத்தார். பின்னர் அனைத்து தோழர் களும் ஊர்வலமாக எலத்தூர் செல்வக்குமார் தலைமையில் எலத்தூர் பேருந்து நிலையம் வந்தடைந்தனர். ஊர்வலத்தில் 500க்கும் மேற்பட்ட பொது மக்கள் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர். இந் நிகழ்ச்சியைக் கண்டு அந்த ஊரில் இருந்த அனைத்துக் கடைக்காரர்களும் ஏதாவது பிரச்சினை ஆகிவிடுமோ என்று பயந்து தங்கள் கடைகளை மூடிவிட்டனர். பந்த் நடத்துவது போன்று அன்று இருந்தது.

ஊர்வலம் பேருந்து நிலையம் வந்தடைந்தவுடன் மாவட்டச் செயலாளர் இராம. இளங்கோவன் பேருந்து நிலையத்தில் இருந்த கழகக் கொடிக் கம்பத்தில் கொடியினை ஏற்றி வைத்தார். அதன் பின்னர் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் பேருந்து நிலையம் முன்பு துவங்கியது. கூட்டத்தில் மாவட்டக் கழக அமைப்பாளர் சதுமுகை பழனிச்சாமி, விடுதலை சிறுத்தைகள் அமைப்பாளர் குமார், ஆதித் தமிழர் பேரவையின் மாவட்ட - நிதிச் செயலாளர் செல்வம், தலைமைக் கழகப் பொறுப்பாளர் முத்து ஆகியோர் பேசிய பின்னர் இறுதியாக மாவட்டக் கழகச் செயலாளர் இராம. இளங்கோவன் சாதி தீண்டாமைக் குறித்தும், இந்த நாட்டில் சாதிகளும், தீண்டாமையும் எப்படி உருவானது - அது யாரால்? யாருடைய நன்மைக்காக உருவாக்கப்பட்டது? யாரெல்லாம் கீழ்சாதி மக்கள்? என்று நீண்ட விளக்கம் அளித்து உரையாற்றினார்.

ஏற்கனவே அந்தப் பகுதியில் உள்ள ஆதிக்க சாதி மக்களிடம் எலத்தூரில் உள்ள சில 'இந்துத்துவ' வெறியர்கள் சில விசமப் பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்டிருந்தனர். இங்குள்ள பெரியார் தி.க.வினர், தாழ்த்தப்பட்டவர்களுக்கு உங்கள் வீடுகளில் பெண் கேட்க வருவார்கள். அவர்கள் வீட்டுச் சாவு நிகழ்ச்சிக் கும் பந்தம் பிடிக்கச் சொல்வார்கள். தாழ்த்தப் பட்டவர்கள் பிணத்திற்கு சடங்கு செய்யச் சொல் வார்கள். புதைப்பதற்கு குழிவெட்டச் சொல்வார்கள். ஆகவே இன்றைக்கு இரட்டைக் குவளையை உடைக்க இவர்களை விட்டால், முடி திருத்தங்களில் முடி வெட்ட இவர்களை நாம் அனுமதித்தால் நாளைக்கு அனைத்தையும் கேட்க ஆரம்பித்து விடுவார்கள். சக்கிலியை, பறையனை - சக்கிலியாக, பறையனாகவே நாம் வைத்திருக்க வேண்டும். இல்லையெனில் நமக்கு சமமாக வந்து உட்கார்ந்து கொள்வார்கள். நமது மரியாதை என்ன ஆவது? என்றெல்லாம் அங்குள்ள மக்கள் மத்தியில் சாதி வெறியை உருவாக்கி வைத்திருந்தனர். இவர்களின் பிரச்சாரத்திற்கு பதிலடி கொடுத்து மாவட்டச் செயலாளர் தனது உரையை நிகழ்த்தினார்.

இங்குள்ளவர்களில் சிலர் தம்மை மேல்சாதி என்று நினைத்துக் கொண்டு தாழ்த்தப்பட்ட மக்களை கீழானவர்களாகப் பார்க்கின்றீர்கள். பிற்படுத்தப் பட்டவர்கள் அனைவரும் மேல்சாதி என்பதுபோல, ஆதிக்கசாதி நாம் என்ற எண்ணத்துடன் தாழ்த்தப் பட்டவர்களை நடத்துகின்றீர்களே! இது நியாயம் தானா? நீங்கள் நினைப்பது போல நிலைமை உண்மையில் எவ்வாறு உள்ளது என்பது உங்களுக்குத் தெரியுமா?

சங்க காலத்தில் இந்த சாதி உண்டா? இடையிலே தான் வந்தது. அதுவும் பார்ப்பனர்களின் வருகையால் தான் வந்தது. அவர்கள் உருவாக்கிய வேதத்தால், மதத்தால் வந்தது. இங்குள்ள பிற்படுத்தப்பட்டவர்கள் - தாழ்த்தப்பட்டவர்கள் அனைவரையும் இந்த இந்துமதம் என்ன சொல்கின்றது? மனுதர்ம சாஸ்திரம் என்ன சொல்கின்றது? என்பது உங்களுக்குத் தெரியுமா? நம் அனைவரையுமே 'சூத்திரன்' அதாவது 'வேசி மக்கள்' என்று சொல்கின்றது. கீழ்சாதி மக்கள் நீசச்சாதி மக்கள் என்று இந்த நாட்டில் மனுதர்ம சாஸ்திரம் சொல்கின்றது. இந்து மதம் சொல்கின்றது. பார்ப்பான் சொல்கின்றான், "சக்கிலியைத் தொட்டால் தீட்டு - சாணானைப் பார்த்தாலே தீட்டு" என்று இந்துமதம் சொல்கின்றது.

இது தெரியாமல் நீங்கள் நம்முடைய சகோதரர்களை கீழ்சாதி, தாழ்த்தப்பட்டவன் என்று சொல்லி தள்ளி வைப்பதில் என்ன நியாயம் உள்ளது? நம் அனைவரையுமே ஒட்டு மொத்தமாக பார்ப்பான் கீழ்சாதி என்று சொல்கின்றபோது - இங்கே நம் அனைவரின் கோபமும் நியாயமாக பார்ப்பனர் மீதும் அவர்களால் உருவாக்கப்பட்ட இந்து மதத்தின் மீதும் தான் திரும்ப வேண்டுமே தவிர நமக்குள்ளே வேறுபாடு வேண்டாம். நாம் அனைவரும் ஒன்றுபட்ட சகோதரர்கள். சாதிகளால் பிரிந்து கிடக்கின்ற இந்த சமூகத்தை ஒன்றுபடுத்தவே எங்களுடைய இந்தபோராட்டம். சமத்துவத்தை, சமதர்மத்தை வலியுறுத்தவே இந்த போராட்டமே யொழிய உங்களிடம் சண்டை போடுவதற்காக இதை நடத்தவில்லை. பெரியார் திராவிடர் கழகம் நடத்தும்

4 ஆம் பக்கம்

## எலத்தூரில் ஒழிந்தது 'இரட்டைக் குவளை'

நிகழ்ச்சி முடிந்தவுடன் எலத்தூர் கழகத் தோழர்கள், எலத்தூர் செல்வக்குமார் தலைமையில் கடத்தூர் காவல் நிலையம் சென்று அங்குள்ள புதுக் காலனியில் இரண்டு தேனீர்க் கடைகளில் இரட்டைக் குவளை வைத்துள்ளது குறித்து புகார் அளித்தனர். அடுத்த நிமிடம் கடத்தூர் காவல்நிலைய துணை ஆய்வாளர் நடவடிக்கையில் இறங்கி அந்தக் கடை உரிமையாளர்களை கைது செய்தார்.

அதனைக் கண்டித்து அந்தக் கடை உரிமையாளர்களின் உறவினர்கள் சாலை மறியலில் ஈடுபட பெரும் பதட்டம் நிலவியது. உடனே எலத்தூர் பேரூராட்சி தலைவர் முன்னிலையில் காவல்துறையின் அதிகாரிகள் பேச்சு வார்த்தை நடத்தினர். கடைக்காரர்களின் உறவினர்கள் கழகத் தோழர்களை, வழக்கை திரும்பப் பெறக் கோரியும், மன்னிப்புக் கேட்கக் கோரியும் நிர்பந்தப்படுத்தினர். நமது தோழர்கள் பிடிவாதமாக கோரிக்கையில் உறுதியாக நின்று தங்கள் நிலையை தெளிவுபடுத்தினர். நாங்கள் பொய் புகார் கொடுக்கவில்லை. உள்ளதைத்தான் சொல்கின்றோம். ஆகவே வழக்கைத் திரும்பப் பெற மாட்டோம் என்று சொல்ல, அவர்கள் வேறு வழியின்றி இனிமேல் இரண்டு டம்ளர் வைக்க மாட்டோம். நீங்கள் வழக்கை திரும்பப் பெறுங்கள் என்று கூறினர். உடனே நமது தோழர் செல்வக்குமார் நீங்கள் சொல்வதை எழுத்துப் பூர்வமாக எழுதிக் கொடுங்கள் என்று கூற, முடிவில் அவர்கள், இனிமேல் ஒரு டம்ளர் மட்டுமே வைப்போம் – இரண்டு குவளை வைக்க மாட்டோம் என்று எழுதிக்கொடுக்க – பின்னர் கழகத் தோழர்கள் வழக்கைத் திரும்பப் பெற்றனர்.

கழகத் தோழர்களின் முயற்சியால், உறுதியான தங்களின் நிலைப்பாட்டால் முழு வெற்றி கிடைத்துள்ளது. தற்போது அங்குள்ள அனைத்துக் கடைகளிலும் இரட்டைக் குவளை முறை ஒழிந்துள்ளது. முடித்திருத்தகத்திலும் அனைவருக்கும் முடிதிருத்தம் செய்யப்படுகின்றது. இந்த வெற்றியால் அங்குள்ள புதுக் காலனி, பழைய காலனியைச் சார்ந்த பொது மக்கள் கழகத்தினருக்கு நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்தனர்.

– புரட்சிப் பெரியார் முழக்கம் 06.09.2007

## அமெரிக்கப் பிடியில் இந்தியா

# அணுசக்தி ஒப்பந்தத்தின் பின்னணி

அணுசக்தி பற்றிய விவாதங்கள் - அறிவார்ந்த வட்டத்திலும், மேட்டிமை மட்டத்திலுமே பேசப்பட்ட நிலைமாறி - இப்போது மக்கள் மன்றத்தின் விவாதப்பொருளாகியுள்ளது. இந்தியாவின் ஆளும் பார்ப்பன-பனியா வர்க்கம் எப்போதும், சர்வதேசப் பிரச்சினைகளை மக்கள் மன்றத்துக்குக் கொண்டு வருவதை விரும்புவதில்லை. இராணுவம் தொடர்பான விவாதங்களை நாடளுமன்றத்திலே நடத்திட, மக்கள் பிரதிநிதிகளுக்கே உரிமை இல்லை.

மன்மோகன்சிங் ஆட்சிக்கு - இடதுசாரிகள் தரும் ஆதரவு திரும்பப் பெறப்பட்டு, மத்தியில் ஆட்சிக் கவிழுமா என்றும், அதனைத் தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தல் வருமா என்றும், பரபரப்புத் தீனிகளை விற்பனை செய்ய முயன்ற 'வெகுமக்கள்' ஊடகங்கள் அணுசக்தி ஒப்பந்தம் பற்றிய செய்திகளை வெளியிடும் கட்டாயத்துக்கு வந்தன. எப்படியோ 'நக்மா', 'திரிஷா', 'நவ்யா', 'பத்மா', 'ரஜினி', 'விஜய்' போன்ற 'சர்வதேச' பிரச்னைகளுக்கு முன்னுரிமை தந்த 'வெகுமக்கள்' ஊடகங்கள் - 'அணுசக்தி' போன்ற பிரச்னைகளையும் எழுத வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டிருப்பது வரவேற்கப்பட வேண்டியதுதான்!

அணுசக்தி என்பதுதான் உலகிலேயே மிக வலிமை யானது என்பதை உலகம் ஒப்புக் கொண்டுவிட்டது. மின்சக்தி, மின் காந்த சக்தி, அணு சக்தி என்ற சக்திகள் தான் அறிவியல் ஒப்புக் கொண்ட சக்திகள். 'கடவுள் சக்தி' என்று ஒன்று இருப்பதாக அறிவியல் ஏற்கவில்லை. 'கடவுள் உருவாக்கிய நாடு' என்று நம்பிக் கொண்டிருப்பவர்களே அணுகுண்டு சக்தியைக் கண்டு அலறுகிறார்கள். அகிலத்தை அலற வைக்கும் இந்த அணுசக்தியைப் பயன்படுத்துவது பற்றித்தான் இப்போது, காரசாரமான விவாதங்கள் நடக்கின்றன. காரணம், சர்வதேச அரசியலை நிர்ணயிக்கும் சக்தி பெற்றதாக இருக்கிறது, இந்த அணு சக்தி!

சரி; இப்போது பிரச்சினைக்கு வருவோம். இந்தியாவும் அமெரிக்காவும் அணுசக்தி தொடர்பாக ஒப்பந்தம் ஒன்றை செய்துக் கொண்டிருப்பது பற்றித்தான் இப்போது விவாதங்கள் நடக்கின்றன. இந்த ஒப்பந்தத்தை '123' ஒப்பந்தம் என்று ஏன் ஊடகங்கள் குறிப்பிடுகின்றன?

வேறு ஒன்றுமில்லை. அமெரிக்கா, 1954 ஆம் ஆண்டிலேயே அணுசக்தி சட்டம் ஒன்றை இயற்றி யுள்ளது. அந்த சட்டத்தின் கீழ் '123' பிரிவில் இப்போது ஏற்படுத்தப்பட்டுள்ள ஒப்பந்தம் வருவதால், '123' என்று குறிப்பிடப்படுகிறது.


> **மின்சக்தி, மின் காந்த சக்தி, அணு சக்தி என்ற சக்திகள் தான் அறிவியல் ஒப்புக் கொண்ட சக்திகள். 'கடவுள் சக்தி' என்று ஒன்று இருப்பதாக அறிவியல் ஏற்கவில்லை. 'கடவுள் உருவாக்கிய நாடு' என்று நம்பிக் கொண்டிருப்பவர்களே அணுகுண்டு சக்தியைக் கண்டு அலறுகிறார்கள்.**


சரி; இந்தியா, இப்போதுதான் முதன்முறையாக அமெரிக்காவுடன் இப்படி ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளதா? இல்லை. 1963 ஆம் ஆண்டிலேயே அமெரிக்காவுடன் இப்படி ஒரு ஒப்பந்தத்தை செய்துள்ளது.. இந்தியாவில் தாராப்பூரில் இரண்டு அணு மின்சார தயாரிப்பு ஆலை இருக்கிறது. இதற்குத் தேவையான 'மிதமான செறிவூட்டப்பட்ட யுரேனிய' எரிபொருள்களை அமெரிக்காவிடமிருந்து பெறுவதற்காக இந்த ஒப்பந்தம் உருவானது. 30 ஆண்டுகளுக்கு செய்யப்பட்ட இந்த ஒப்பந்தம் 1993 ஆம் ஆண்டு வரை நீடித்திருக்க வேண்டும். ஆனால் நீடிக்காமல் போய்விட்டது. 1974 இல் இந்தியா 'அணுகுண்டை' வெடித்து சோதனை நடத்தியதால், இனி தாராப்பூருக்கு எரிபொருள் வழங்க முடியாது என்று அமெரிக்கா பின் வாங்கியது. பின்னர் 1993 வரை பிரான்சு நாட்டிலிருந்து இந்தியா அணு உலை களுக்கான எரிப் பொருள்களைப் பெற்று வந்தது.

அமெரிக்காவால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அணு உலைகளுக்கான எரி பொருளை மீண்டும் பெறுவதற்கான முயற்சிகளை இந்தியா மேற்கொண்டது. இதற்காக கடந்த 24 மாதங்களாக (பா.ஜ.க. ஆட்சி காலத்திலேயே) இரு நாட்டின் பிரதிநிதிகளும் விவாதித்தனர். இப்போது ஒப்பந்தம் உறுதியாகியுள்ளது. மீண்டும், அணு உலைகளுக்கு அமெரிக்கா எரிபொருள், எந்திரம், தொழில் நுட்பங்களை வழங்குவதற்கு இந்தியாவுக்கு நிபந்தனைகளை விதித்துள்ளது. அந்த நிபந்தனைகள் தான் '123' ஒப்பந்தத்தில் இடம் பெற்றுள்ளன.

நிபந்தனைகள் என்ன?

- அணுசக்தித் துறையை இந்தியா இரண்டாகப் பிரித்துவிட வேண்டும். மின் உற்பத்திக்கான அணுசக்தித் துறை என்பது ஒன்று; ராணுவத்துக்கான அணுசக்தித் துறை என்பது மற்றொன்று; இதை ஏற்றுக் கொண்டு இந்தியா இரண்டாக துறையைப் பிரித்துவிட்டது.

- இந்தியாவில் அணுசக்தியைப் பயன்படுத்தும் எல்லா உலைகளையும் சர்வதேச அணுசக்தி அமைப்பின் நேரடி கண்காணிப்புக்கு உட்படுத்த வேண்டும். இதன்படி இந்தியாவில் உள்ள 22 உலைகளில் 14 உலைகளை கண்காணிப்புக்கு உட்படுத்த இந்தியா சம்மதித்துவிட்டது.

- அணு உலைகளில் யுரேனியம் என்ற எரிபொருள் பயன்படுத்தப்படுகிறது. இந்த யுரேனியம் என்ற எரிபொருள் எரிந்து தீர்ந்த பிறகு, எரிந்த யுரேனியத்திலிருந்து, 'புளுட்டோனியம்' என்ற பொருளை, மிக நுட்பமான வழிமுறைகளில் தனியே பிரித்தெடுக்க முடியும். அந்த புளுட்டோனியத்தைப் பயன்படுத்தி அணுகுண்டு தயாரிக்க முடியும். எனவே தான் அணு உலைகளில் மறு சுழற்சி முறை, எப்போதும் கடும் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுகிறது. இந்த ஒப்பந்தத்தின் படி மறுபயன்பாட்டுக்கு யுரேனியம் எரிபொருளைப் பயன்படுத்துதலை அமெரிக்க சர்வதேச அணுசக்தி அமைப்பின் கண்காணிப்புக்கு உட்படுத்த வேண்டும். இதற்கு இந்தியா சம்மதித்து விட்டது.

- அணு மின்சார தயாரிப்புக்காகப் பயன்படுத்தப்படும் எந்திரங்களில், சில எந்திரங்கள் அணுகுண்டு தயாரிக்கவும் பயன்படுமானால், அந்த எந்திரங்களை அமெரிக்கா மட்டுமல்ல, எந்த நாடும் இந்தியாவுக்கு தரக்கூடாது என்பது மற்றொரு நிபந்தனை; இதை இந்தியா ஏற்றுக் கொண்டுள்ளது.

- 1974 ஆம் ஆண்டு இந்திரா காந்தி பிரதமராக இருந்தபோது ராஜஸ்தானில் உள்ள பொக்ரானில் இந்தியா அணுகுண்டு வெடித்தது. 'புன்னகைக்கும் புத்தர்' என்று அதற்கு பெயரிடப்பட்டது. அப்போது முதல் அணு ஆயுத நாடுகள் வரிசையில் இந்தியா இணைந்தது. பிறகு 1998 இல் வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது அதே பொக்ரானில் அணுகுண்டு வெடிக்கப் பட்டது. பரிசோதனைக்காக இந்த வெடிகுண்டை வெடித்த அன்றைய வாஜ்பாய் ஆட்சி, 'இந்தியா அணு ஆயுத நாடு' என்று அறிவித்தது. மேற்குறிப்பிட்ட இரண்டு முறை நடந்த குண்டு வெடிப்புகளுமே பிரதமர்கள், ஒரு சில விஞ்ஞானிகள் மட்டத்தில் மட்டும் ரகசியமாக வைக்கப்பட்டு வெடிக்கப்பட்டன. பாதுகாப்புத் துறை அமைச்சர்களுக்குக் கூடத் தெரியாது. பிறகு 1995 இல் நரசிம்மராவ் பிரதமராக இருந்தபோது, அணு குண்டு வெடிப்புக்குத் திட்டமிடப்பட்டது. அதை தன்னிடமிருந்த சக்தி வாய்ந்த செயற்கைக் கோள் வழியாக அமெரிக்கா தெரிந்து கொண்டது. எனவே இந்த முயற்சி கைவிடப்பட்டது. இப்போது, இந்தியா மீண்டும் அணுகுண்டு வெடிக்குமானால், அமெரிக்காவின் இந்த ஒப்பந்தமே ரத்தாகிவிடும். அமெரிக்கா இந்தியாவுக்கு வழங்கிய தொழில் நுட்ப உதவிகளைத் திரும்பப் பெற்றுக் கொள்ளும். அமெரிக்கா தனது உதவிகளை நிறுத்தினாலும், இந்தியாவின் அணு உலைகள் மீதான சர்வதேச கண்காணிப்பு மட்டும் தொடரும். இதற்கும் இந்தியா சம்மதித்துவிட்டது.

- இந்தியா மறுபடியும் அணுகுண்டு வெடித்தால், உடன்பாடு ரத்தாகும் என்று பிரிவு '123' உடன்பாட்டில் நேரடியாக இடம் பெறவில்லை. அதே நேரத்தில் அமெரிக்க நாடாளுமன்றம், தனது நாட்டுக்காக நிறைவேற்றியுள்ள 'ஹைடு' சட்டத்தின் மூலம், இது வலியுறுத்தப்பட்டுள்ளது. ஹென்றி ஹைடு என்ற அமெரிக்க செனட்டர் (நாடாளுமன்ற உறுப்பினர்) தயாரித்த மசோதா இது என்பதால் இது 'ஹைடு' சட்டம் என்று அழைக்கப்படுகிறது. இந்த ஒப்பந்தத்தை, இந்தியா முறையாக செயல்படுத்துகிறதா என்பதைக் கண்காணித்து, அமெரிக்கா நாடாளுமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும் என்று, இந்த சட்டம் மறைமுகமாக இந்தியாவைக் கட்டுப்படுத்துகிறது. அமெரிக்கா வின் இந்தச் சட்டம், மற்றொரு நாட்டைக் கட்டுப் படுத்தாது என்று, ஒப்பந்தத்தை ஆதரிப்பவர்கள், விளக்கம் தந்து கொண்டிருக்கும்போதே அமெரிக்காவின் அமைச்சக செய்தி தொடர் பாளர் மக்கார்மாக் என்பவர் குட்டை உடைத்து விட்டார். இந்தியா அணு குண்டை வெடித்தால், ஒப்பந்தம் ரத்தாவது உறுதி என்று அறிவித்து விட்டார்.

- அணுகுண்டு 'கிளப்'பில் உள்ள வல்லரசு நாடுகள் தவிர வேறு எந்த நாடு அணுகுண்டு வெடித்து சோதனை செய்தாலும், அந்த நாட்டோடு, அமெரிக்கா செய்துள்ள ஒப்பந்தம் தானாகவே ரத்தாகிவிடும் என்று 'ஹைடு' சட்டம் கூறுகிறது. அணுசக்தி ஒப்பந்தத்தோடு அமெரிக்கா 'ஹைடு' சட்டத்தையும் தனது நாட்டில் நிறைவேற்றி வைத்திருப்பதுபோல், இந்தியாவுக்கான தனி சட்டம் எதுவும் இங்கே நிறைவேற்றப்படவில்லை.

  ஒப்பந்தப்படி அமெரிக்கா எரிபொருள், தொழில் நுட்ப உதவி, எந்திரங்களை வழங்கத் தவறுமானால், ஒப்பந்தத்தை ரத்து செய்வதற்கு, இந்தியாவால் முடியாது. இந்திய நாடாளுமன்றத்தாலும் முடியாது.

- அணுசக்தி தொடர்பான இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை - அமெரிக்கக் கொள்கையுடன் இசைவாக இருக்க வேண்டும் என்பது, இந்த ஒப்பந்தத்தில் அடங்கியுள்ள மற்றொரு முக்கிய அம்சம். ஈரானுக்கு எதிராக அமெரிக்கா எடுக்கும் அத்தனை 'அடாவடி' நடவடிக்கைகளுக்கும் இந்தியா துணை போக வேண்டியிருக்கும்.

இந்தியா, தனது மின் உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கு அணு மின்சக்தியை நாடிப் போக முடிவெடுத்துவிட்டது. அதற்கு இந்த ஒப்பந்தம் தான் ஒரே வழி என்கிறார் மன்மோகன் சிங்.

இந்தியாவின் மொத்த மின்சார உற்பத்தியில் (1,26,839 மெகாவாட்) நிலக்கரியைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் அனல் மின்சாரத்தின் உற்பத்தி - 66 சதவீதம்.

அணைகளில் தேங்கிடும் நீரைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் புனல் மின்சாரத்தின் உற்பத்தி 26 சதவீதம். காற்றாலை, சூரிய சக்தி வழியாக (சுற்றுச் சூழலுக்கு பாதிப்புகளை உருவாக்காத) உற்பத்தியாகும் மின்சாரம் 5 சதவீதம். ஆனால் அணு உலைகள் மூலம் தயாரிக்கப்படும் மின்சாரம் 3 சதவீதம் மட்டுமே. இதற்காக அரசு ஒதுக்கியுள்ள தொகை ரூ.3897 கோடி. அதே நேரத்தில் சூரிய சக்தி,

4 ஆம் பக்கம்

# சேலம் ரயில் கோட்டம் : கழகம் நடத்திய மறியல்

நாடாளுமன்றத்தில் சேலம் இரயில்வே கோட்டம் பற்றி இரயில்வே அமைச்சர் லாலு பிரசாத் யாதவ் சொன்ன கருத்துக்களை கண்டித்தும், அறிவிக்கப்பட்ட தேதியில் கோட்டம் தொடங்க வேண்டும் என்றும், கோவை, திருப்பூர் பகுதிகள் உள்ளடக்கிய சேலம் இரயில்வே கோட்டத்திற்கான அரசாணை வெளியிட வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி அனைத்துக் கட்சிகளையும் ஒருங்கிணைத்து பெரியார் திராவிடர் கழகம் இரயில் மறியல் போராட்டம் நடத்தியது. கோவை, போத்தனூர், திருப்பூர், பொள்ளாச்சி, உடுமலைப் பகுதிகளில் நடைபெற்ற இரயில் மறியல் போராட்டத்தில் கழகப் பொதுச்செயலாளர் கு. இராமகிருட்டிணன் தலைமை தாங்கினார். திமுக, காங்கிரஸ், பாஜக, இந்திய கம்யூனிஸ்டு கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி, விடுதலை சிறுத்தைகள், புதிய தமிழகம், ஆதித் தமிழர் பேரவை, வணிகர் சங்கங்கள், வர்த்தக நிறுவனங்கள், மாணவர் அமைப்புகள், இரயில் பயணிகள் சங்கம் மற்றும் பல்வேறு அமைப்புகள் இரயில் மறியல் போராட்டத்தில் பங்கேற்றன.

கோவையில் கழகப் பொதுச் செயலாளர் கு. இராமகிருட்டிணன் தலைமையிலும், திருப்பூரில் இல. அங்ககுமார் தலைமையிலும், போத்தனூரில் ஆட்சிக்குழு உறுப்பினர் வெ. ஆறுச்சாமி தலைமையிலும், பொள்ளாச்சி நகரத் தலைவர் வே. வெள்ளிங்கிரி, செயலாளர் கா.சு. நாகராசு தலைமையிலும் கழகத் தோழர்கள் இரயில் மறியலில் பங்கேற்றார்கள்.

அதிகாலை 5 மணிக்கு தொடங்கிய போராட்டத்தின்போது மங்களூர்- சென்னை வெஸ்ட் கோஸ்ட் ரயில், டெல்லி-திருவனந்தபுரம்-கேரளா விரைவு ரயில்கள் உள்பட பல ரயில்கள் மறிக்கப்பட்டன. காலை 11 மணி வரை இரயில் மறியல் நடந்து கொண்டிருந்த போது இரயில்வே அமைச்சர் லல்லு பிரசாத் யாதவ் தமிழக முதலமைச்சரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு சேலம் கோட்டம் தொடங்கப்படும் என்று உறுதியளித்தார் என்ற செய்தியறிந்து இரயில் நிலையம் முன் திரண்டிருந்த அனைத்துக் கட்சியினர் மத்தியில் கழகப் பொதுச்செயலாளர் கு. இராமகிருட்டிணன் உரையாற்றினார். அவர் பேசியதாவது:

“போராட்டம் நடத்திய தமிழ் மக்களின் உணர்வுகளை மதித்து சேலம் கோட்டம் உறுதி என்று மத்திய இரயில்வே அமைச்சர் லல்லு பிரசாத் யாதவ் அறிவித்துள்ளார். நமது போராட்டம் வெற்றியடைந்துள்ள நிலையில் சேலம் கோட்டத்தில் திருப்பூர், கோவை உள்ளிட்ட பகுதிகளை சேர்க்காவிட்டால் நமது போராட்டம் தொடரும்” என்று அறிவித்தார்.

சி.கே.எம். தமிழ்ச்செல்வி, களப்பணி ஒருங்கிணைப்பாளர் ந. பிரகாசு, அலுவலக பொறுப்பாளர் சா. கதிரவன், பகுதி கழக செயலாளர்கள் இ.மு.சாஜித், ம. சண்முக சுந்தரம், ப. மாணிக்கம், சு. செந்தில் குமார், அர. இராசன், மாநகர அமைப்பாளர் கா. சோமசுந்தரம், திருப்பூர் இராவணன், கோபிநாத், மூர்த்தி, பா. சத்யா, அண்ணாமலை சரவணன், கார்த்தி, ப. கண்ணன், அசோக்குமார், செபாஸ்டின், சூலூர் ஒன்றிய செயலாளர் பன்னீர்செல்வம், கார்த்திகேயன், சி. மூர்த்தி மற்றும் தமிழ்நாடு மாணவர் கழக பொறுப்பாளர்கள் ந. பன்னீர்செல்வம், பிச்சுமணி, ச. மணிகண்டன், பூர்ண சந்திரன் மற்றும் தோழர்கள் எழுச்சியுடன் போராட்டத்தில பங்கேற்றனர்.

- போராட்டம் அறிவித்த நாளிலிருந்து பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தவர்கள் கழக அலுவலகத்திற்கு வந்து தங்கள் ஆதரவை கடிதங்கள் மூலம் தெரிவித்தனர்.
- பல்வேறு நாளிதழ், தொலைக் காட்சியினர் பொதுச்செயலாளரிடம் கோட்டம் பற்றிய செய்திகளை சேகரித்து வெளியிட்டார்கள்.
- சன் தொலைக்காட்சியில் சுமார் 20 நிமிடங்கள் பொதுச்செயலாளர் பேட்டியை நேரடி ஒளிபரப்பு செய்தனர்.

**செய்தி : சா. கதிரவன்**

## சிந்தனையாளர் வே. ஆனைமுத்துக்கு பாராட்டு!



சிந்தனையாளர் தோழர் வே. ஆனைமுத்து அவர்களுக்கு “பொங்கு தமிழ் வளர்ச்சி அறக்கட்டளை” சார்பில் சென்னை வாணி மகாலில் பாராட்டு விழா நடைபெற்றது. பா.ம.க. தலைவர் கோ.க.மணி தலைமை தாங்கினார். மருத்துவர் ச. இராமதாசு, ஆர். நல்லக்கண்ணு, க. வேங்கடபதி (மத்திய அமைச்சர்), பழ. நெடுமாறன், தொல். திருமாவளவன், முனைவர் பொற்கோ, சங்கமித்ரா உள்ளிட்ட பலரும் வாழ்த்துரையாற்றினர். கழக சார்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்று உரையாற்றினார். மண்டல் குழு பரிந்துரை அமுலாக்கத்துக்காக அரும்பாடுபட்டு பல்வேறு மாநிலங்களுக்கும் சென்று, இயக்கங்களை நடத்தியதையும், ‘பெரியார் சிந்தனைகள்’ நூல் தொகுப்பை வெளியிட்டதையும், சுட்டிக் காட்டிய கொளத்தூர் மணி, உயர்நீதிமன்ற உச்சநீதிமன்ற நீதிபதிகளை தேர்வு செய்ய வாரியம் அமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். தோழர் ஆனைமுத்து ஏற்புரை நிகழ்த்தினார். அவருக்கு அறக்கட்டளை சார்பில் ஒரு லட்சம் ரூபாய் நிதி வழங்கப்பட்டது.

# ‘மார்க்சியம் - பெரியாரியம் - தேசியம்’ நூல் மதிப்புரை (2)

தோழர் பெ. மணியரசன், மார்க்ஸ், எங்கல்ஸ் ஆகியோர் பயன்படுத்திய ‘Phillistine’ என்ற சொல்லுக்கு ‘அற்பவாதம்’ என்று விளக்கம் தந்து, எஸ்.வி.ஆர். அற்பவாதம் பேசுவதாக குறிப்பிட்டிருந்தார். இதற்கு தோழர் எஸ்.வி.ஆர். விரிவாக அளித்துள்ள மறுப்பில் அந்த சொல்லை ‘பண்பாடற்றவன்’, ‘சமூக பிற்போக்குவாதி’ போன்ற பொருள்களிலே மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின் ஆகியோர் பயன்படுத்தியதாகவும், மணியரசன், பொருள் புரியாமல் எழுதுவதாகவும் மறுத்துள்ளார். பார்ப்பன இந்திய தேசியத்தில் தஞ்சமடைந்துவிட்டதாக பெ.ம. கூறிய குற்றச்சாட்டை மறுக்கும் எஸ்.வி.ஆர்., தேசிய இனப் பிரச்சினையை மார்க்சிய லெனினியக் கண்ணோட்டத்தில் தாம் பார்ப்பதாகவும், பெ.ம. பேசும் தமிழ்த் தேசியம் ‘பூர்ஷ்வாத் தமிழ் தேசியம்’ என்றும் சுட்டிக்காட்டுகிறார்.

“தேசம், தேசியம், தேசிய இன ஒடுக்குமுறை, ஆதிக்க தேசிய இனம், ஆதிக்கத்துக்குட்பட்ட தேசிய இனம் என்பன போன்ற விஷயங்களில் யாந்திரிகமான வாய்ப்பாடுகளை வைத்துக் கொண்டிருக்கிறார் பெ.ம. என்று கூறும் எஸ்.வி.ஆர், அதற்காகவே ‘இந்தி ஆதிக்க தேசிய இனம்’ என்று ஒன்று இருப்பதாகக் கண்டு பிடிக்க வேண்டியிருக்கிறது. இந்தியாவைப் பொருத்தவரை ஆதிக்க தேசிய இனம் என்றும், ஆதிக்கம் செலுத்தும் தேசிய இனங்கள் என்றும், இனங்களைப் பாகுபடுத்த முடியாது என்றும், தேசிய இன ஒடுக்குமுறைத் தன்மை இந்திய தேச அமைப்பிலேயே கட்டமைக்கப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். இது மிகச் சரியான கருத்தாகும். இது தொடர்பாக இந்திய தேசியம் பற்றிய பெரியார் கருத்தை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

“சாதாரணமாக யோசித்துப் பார்த்தோமானால் இந்தியாவில் தேசியம் என்ற பதமே தப்பான வழியில் மக்களை ஏமாற்றிப் பிழைக்க ஒரு கூட்டத்தார் அதாவது மேல் சாதியார் என்று சொல்லிக் கொள்ளும் பார்ப்பனர்களால் விற்பனை செய்யப்பட்டு, அவர்களுக்குத் தாசர்களாக இருந்தால் தான் பிழைக்க முடியும் என்று கருதிய சில பார்ப்பனரல்லாத படித்தவர்கள் என்பவர்களால் தயாரிக்கப்பட்டு, இவ்விரு கூட்டத்தார் சூழ்ச்சியால் பாமர மக்களை ஏமாற்றிப் பிழைக்க உபயோகிக்கப்பட்டுவரும் பாதகமும் அபாயகரமுமான அர்த்தமற்ற ஒரு வார்த்தையாகும்” - பெரியார்.

பெரியார் சுட்டிக் காட்டிய அபாயகரமான, பாதகமான ‘இந்திய தேசியம்’ போன்றதோர் தேசியம் தோழர்கள் மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின், ஸ்டாலின், மாவோ போன்ற பொதுவுடைமைத் தலைவர்கள் சந்தித்த தேசியச் சிக்கலில் கிடையாது. அதனால் அவர்கள் அதுபற்றி எழுதவும் இல்லை. எனவே இதுவரை சொல்லப்பட்டு வரும் மார்க்சிய, லெனினிய வரையறைக்குட்படாத பார்ப்பனர்களால் ஆங்கிலேயர் உதவியோடு உருவாக்கப்பட்ட இந்திய தேசியத்தைத் தோலுரித்து சரியாக அடையாளம் காட்டியது பெரியாரியல் ஆகும்.

“சமதர்ம பூமியை உடனடியாகச் சாத்தியமான ஒரு விஸ்தீரணத்தில் கட்டுவதற்கான முயற்சி முக்கியமானது” என்று தாம் கூறியதை, “ஒரு விஸ்தீரணத்துக்குள் புரட்சி நடந்தால் போதும்” என்று பெ.ம. திரித்து எழுதுவதை எடுத்துக்காட்டியுள்ள எஸ்.வி.ஆர். இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டை சுட்டுகிறார். இதில், பெ.ம., எஸ்.வி.ஆர். மீது கூறிய ‘விஸ்தீரணப் புரட்சியாளர்’ என்ற குற்றச்சாட்டை எஸ்.வி.ஆர். வலிமையாக மறுத்துள்ளார்.

சிலப்பதிகாரம் - தமிழ்த் தேசிய காப்பியம் என்று, பெ.ம. கூறுவதை வலிமையான சான்றுகளுடன் எஸ்.வி.ஆர். மறுத்துள்ளார்.

‘திராவிடர்’ என்ற குறியீட்டை முன்னிறுத்துவதன் அடிப்படையான நோக்கம் பார்ப்பனரல்லாதவர் என்பதற்காகவே என்பதைப் புரிந்தப் பிறகும், திராவிடர் என்ற குறியீட்டைப் பயன்படுத்துவோர் ‘திராவிடத் தேசியம்’ பேசுவதாகவே பெ.ம. மீண்டும் மீண்டும் ‘நிழல் யுத்தம்’ நடத்திக் கொண்டிருக்கிறார்.

தமிழ்நாடு, கேரளா, கன்னடம், ஆந்திராவை ஒருங்கிணைத்த திராவிட நாடு வேண்டும் என்று கோருவது தான் ‘திராவிடர் தேசியம்’ என்றால். அந்த திராவிடர் தேசியத்தைப் பேசுவது யார் என்பதை, ‘பெ.ம.’ இனியாவது விளக்க வேண்டும்.

தமிழர் கண்ணோட்டம் - நேச சக்திகளோடு முரண்பாடுகளை உருவாக்கவே துடிக்கிறது. கொளத்தூர் மணி, சுப.வீரபாண்டியன், தியாகு, எஸ்.வி.ஆர்., புனித பாண்டியன் என்று இந்த பட்டியல் தொடருகிறது. இதே போன்ற அளவு வேகத்தை பார்ப்பனர்கள், மதவெறி சக்திகள், இந்திய தேசியம் பேசுவோர் மீதும் தமிழர் கண்ணோட்டம் திருப்பலாமே!

அதே போல் - ‘தேசிய சுயநிர்ணய உரிமையை’ சர்வதேசப் பார்வையில் பார்ப்பதாகக் கூறும் தோழர் எஸ்.வி.ஆர். விடுதலைப் புலிகள் பிரச்சினையில் மட்டும் ‘நமது நாட்டில் செய்யவேண்டிய வேலைகள் நமக்கு நிறைய உள்ளன’ என்று கூறுவது, ஏற்குத் தக்கதாக இல்லை.

தோழர் எஸ்.வி.ஆர். கருத்துகள் சிலவற்றின் மீது பெரியார் திராவிடர் கழகத்துக்கு மாறுபட்ட கருத்துகள் உண்டு என்றாலும், தமிழ்த் தேசியம், சுய நிர்ணய உரிமை, தனித் தமிழ்நாடு, தமிழர் பண்பாடு உள்ளிட்ட பிரச்சினைகளில் ஆரோக்கியமான விவாதங்களை முன் வைத்துள்ளது இந்த நூல்.

**– கோடங்குடி மாரிமுத்து**

வெளியீடு:
**விடியல் பதிப்பகம்,**
11 பெரியார் நகர், மசக்காளி பாளையம் (வடக்கு),
கோவை - 641015,
தொலைபேசி: 0422-2576772

பக்கம்: 136 விலை : 60

# வங்கக் கடலில் போர் மேகம்!

அமெரிக்காவுடன் ராணுவ ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்ட இந்தியா, அதன் தொடர்ச்சியாக வங்காளவிரிகுடாவில் போர் மேகத்தை உருவாக்கியுள்ளது.

நான்கு நாள் நடைபெறும் இந்த ஒத்திகை செவ்வாய்க் கிழமை தொடங்கியது. இதில் இந்தியா உள்பட அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான், சிங்கப்பூர் ஆகிய 5 நாடுகளைச் சேர்ந்த 26 போர்க்கப்பல்கள் பங்கேற்றன.

அமெரிக்கா சார்பில், சர்ச்சைக் குரிய அணுசக்தி கப்பல் நிமிட்ஸ் உள்பட 13 போர்க் கப்பல்கள் வருகின்றன.

இந்திய கப்பற்படையைச் சேர்ந்த ஐ.என்.எஸ். விராட் உள்பட 8 போர்க் கப்பல்கள் ஒத்திகை இடத்தை ஏற்கெனவே அடைந்துவிட்டன.

இந்தியாவில் நேரு காலத்தில் அன்பளிப்பாக வழங்கப்பட்ட மியான்மரின் கோகோ தீவில் சீனா அமைத்து வரும் கடற்படை தளத்துக்கு 30 கடல் மைல் தொலைவில் போர் ஒத்திகை நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

# “கொள்கைப் பரப்புச் செயலாளர்”

போன ஆட்சியில் அ.தி.மு.க.வின் கொள்கை பரப்புச் செயலாளராகவும், இந்த ஆட்சியில் தி.மு.க.வின் கொள்கை பரப்புச் செயலாளராகவும் உள்ள கி.வீரமணி, தனக்கு வேண்டிய சிங்கப்பூர், மலேசிய தொழிலதிபர்களுக்கு இங்கே நிலம் வாங்கித் தருவதற்காக துணை நகரம் வேண்டும் என வலியுறுத்துகிறார். அதனால், முதல்வரும் துணை நகரம் பற்றி மறுபடியும் பேசத் தொடங்கியிருக்கிறார். அமைச்சர் ஆற்காடு வீராசாமி, ஒரு கூட்டத்தில் சந்திர மண்டலத்திலா குடியேற முடியும், வானத்திலா வீடு கட்ட முடியும் என்று கேட்கிறார்.

**2007 செப். 01 ‘நக்கீரன்’ இதழில் மருத்துவர் இராமதாசு பேட்டியிலிருந்து**

## மனித உரிமைப் போராளி பி.வி. பக்தவத்சலம் முடிவெய்தினார்



மனித உரிமைப் போராளி பி.வி. பக்தவத்சலம் (71) கடந்த 2 ஆம் தேதி முடிவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். நக்சல்பாரி இயக்கத்தில் பங்கேற்று செயல்பட்ட அவர் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக வாதாடி வந்தார். 1965 இல் வழக்கறிஞராகப் பதிவு செய்த அவர் 1975 இல் மக்கள் உரிமைக் கழகத்தில் தீவிரப் பங்கெடுத்து செயல்பட்டார். 1980 இல் காவல்துறையுடன் மோதல் என்று இளைஞர்கள் கொல்லப்பட்டதை எதிர்த்துக் குரல் கொடுத்ததால், தேசத் துரோகக் குற்றத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். ராஜீவ் மரணத்தைத் தொடர்ந்து ஈழத் தமிழர் அகதிகள் மீது அன்றைய ஜெயலலிதா ஆட்சி கட்டவிழ்த்துவிட்ட உரிமை பறிப்புகளை எதிர்த்ததற்காக தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். கடந்த ஒரு மாத காலமாக அவர் உடல்நலம் பாதிக்கப்பட்டு மீண்டும் நலம் பெற்று வந்த நிலையில், திடீரென மரணம் சூழ்ந்து கொண்டது. துயரத்தால் வாடும் பி.வி.பி. குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். கழக சார்பில் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், தபசி குமரன், அன்பு தனசேகரன் ஆகியோர் இறுதி மரியாதை செலுத்தினர்.

## திருச்சி மாவட்டத்தில் இரட்டைக் குவளை தேநீர்க் கடைகள் பட்டியல்

கேசவன் டீக்கடை,
மேலூர்,
திருவரங்கம் வட்டம்.

திருவேங்கடம்
கோனார் கடை
மேலூர்

கணேசன் டீக்கடை
அமையாபுரம்
மணப்பாறை -
வீரப்பூர் வழி.


“புரட்சிப் பெரியார் முழக்கம்”
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 2451 2857


**பெரியார் திராவிடர் கழக புதிய அலுவலக முகவரி:**
1, காமராசர் சாலை,
மயிலாப்பூர்,
சென்னை - 600 004.
**தொலைபேசி**
**044-42702230**

## ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ இதழுக்கு சந்தா அனுப்பி விட்டீர்களா?

முதல் பக்கத் தொடர்ச்சி

இந்தப் போராட்டம் உங்களை ஒன்றுபடுத்தவே. உங்களிடம் வன்முறை செய்வதற்கு அல்ல. வன்முறையில் பெரியார் இயக்கம் ஒருபோதும் நம்பிக்கை வைத்தது இல்லை. அது எங்களின் நோக்கமும் அல்ல. உங்கள் கடையை உடைப்பதால் எங்களுக்கு என்ன இலாபம்? யாரோ சில விசமிகளின் பிரச்சாரத்தை நம்பி நீங்கள் ஏன் அனைவரும் கடையை அடைத்து வைத்துள்ளீர்கள். சுதந்திரமாகத் திறந்து வையுங்கள். எல்லோரையும் சமமாக நடத்துங்கள்.

பெரியார் திராவிடர் கழகம் வலியுறுத்துவதெல்லாம் சாதிப் பாகுபாடு காட்ட வேண்டாம். தீண்டாமை நமக்குள்ளே வேண்டாம் - சமத்துவம் நமக்குள் வேண்டும் என்பது மட்டுமே. ஆகவே எங்களின் நோக்கத்தைப் புரிந்து கொண்டு எங்களுக்கு ஆதரவாக இருங்கள். சாதியை, மதத்தை விட்டு சமத்துவத்தைப் பேணுவோம். இந்த நாட்டின் உற்பத்திப் பொருள்கள் அனைத்துமே பெரும்பாலும் தாழ்த்தப்பட்டவர்களின் உழைப்பால்தான் விளைகின்றது. விவசாய நிலத்திலாகட்டும், தொழிற்சாலைகளிலாகட்டும் எங்குப் பார்த்தாலும் அவர்களின் உழைப்புதான் அதிகமாக உள்ளது. தாழ்த்தப்பட்டவர்களின் உழைப்பால் உருவாகும் பொருளை உண்ணும்போதும், அனுபவிக்கும் போதுமட்டும் அது தீட்டாவதில்லையா?

பெரியார் இயக்கம் என்பது உங்களுக்காகப் பாடுபடும் இயக்கம். உங்கள் அனைவரின் வளமான வாழ்வுக்காக, உரிமைகளுக்காக எந்தப் பிரதிபலனும் எதிர்பார்க்காமல் பாடுபடும் இயக்கம். ஒன்று படுவோம் வாருங்கள்! என உரையாற்றினார்.

முடிவில் கூடக்கரை கிளைத் தலைவர் அருளானந்தம் நன்றி கூறினார். இந்த தெருமுனை பிரச்சாரக் கூட்டத்தில் மாவட்டத் தலைவர் நாத்திகசோதி, மாவட்ட இணைச் செயலாளர் கருப்பண்ணன், காசிபாளையம் பாலு, கோபி நகர அமைப்பாளர் குணசேகரன், செயராமன், எலத்தூர் கழகத் தோழர்கள், கூடக்கரைத் தோழர்கள், கிளாகுளம் செந்தில்குமார், ஈரோடு நகரச் செயலாளர் லெமூரியன், இளைஞரணிச் செயலாளர் முரு கானந்தம், சிவா, சுப்ரமணி மற்றும் நூற்றுக் கணக்கான கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர். அத்துடன் ஆதித் தமிழர் பேரவைத் தோழர்கள், விடுதலை சிறுத்தைகள் அமைப்பைச் சார்ந்த தோழர்கள், தமிழ்த் தேசியப் பொதுவுடைமைக் கட்சியின் ஈரோடு மாவட்ட செயலாளர் சுவடி இளங்கோ, எலத்தூர் புதுக்காலனி, பழைய காலனி பொதுமக்கள் அனைவரும் திரண்டு இருந்தனர்.

**நமது செய்தியாளர்**

2 ஆம் பக்கத் தொடர்ச்சி

காற்றாலை முறையில் தயாரிக்கப்படும் மின்சாரத்துக்கு அரசு ஒதுக்கியுள்ளது ரூ.600 கோடி மட்டுமே. இந்த ஒதுக்கீட்டிலே 5 சதவீத மின்சார உற்பத்தி நடக்கும் போது, ரூ.4 ஆயிரம் கோடியை ஒதுக்கி, 3 சதவீத அணு மின்சாரத்தை உற்பத்தி செய்யத் துடிக்கிறது இந்திய அரசு.

அணு சக்தியைப் பயன்படுத்துவதால் உருவாகும் ஆபத்துகள் பற்றி, உலகம் முழுதும் பேசப்படுகிறது. இந்த உற்பத்திகளில் உருவாகும் கழிவுகள் மிக மோசமான பாதிப்புகளை உருவாக்கி வருகின்றன. அணுக் கழிவுகளை ஆபத்து இல்லாமல், எப்படி கழிப்பது என்பது பற்றிய பாதுகாப்பு முறைகள் எதுவும் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

1979 இல் அமெரிக்காவில் ‘3 மைல் தீவு’ என்ற இடத்தில் உள்ள அணு உலையில் விபத்து நடந்தது. 200 கோடி டாலர் செலவிட்டும், அதன் பாதிப்பிலிருந்து 30 ஆண்டுகளுக்குப் பிறகும் மக்கள் விடுபட முடியவில்லை. 1985 இல் ரஷ்யாவில் செர்னோபில்லில் நடந்த அணு உலை விபத்தில், லட்சக் கணக்கில் பாதிக்கப்பட்டனர். இதன் பாதிப்பு 2030 வரை மரபு வழியாக இருக்கும் என்று கண்டறியப்பட்டுள்ளது.


அணு உலைகளுக்கான மூலப் பொருள்கள் இந்தியாவிலேயே போதுமான அளவு கிடைத்திடும் போது இந்த ஒப்பந்தம் தேவை இல்லை என்பதே, இந்திய விஞ்ஞானிகளின் கருத்தாக உள்ளது. அமெரிக்கா யுரேனியம் வழங்குவதை நிறுத்தியவுடன், இந்திய விஞ்ஞானிகள், அணுசக்தி தொழில் நுட்பத்தில் ‘அதி வேக ஈனுலையை’ உருவாக்கி புதிய சாதனை படைத்திருக்கிறார்கள். தேவைக்கு அதிகமாகவே இந்தியாவில் யுரேனியம் இருக்கிறது. அதைவிட அதிகமாக தோரியம் கிடைக்கிறது. ஆஸ்திரேலியாவுக்கு அடுத்ததாக, தோரியம் அதிகமாகக் கிடைக்கும் நாடு இந்தியா. ஆனாலும், இந்தியா ஏன் இப்படி ஒரு ஒப்பந்தத்தைப் போட துடிக்க வேண்டும்? - அடுத்த வாரம் பார்ப்போம்.

**(இரா)**


Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 6th September 2007


பெறுநர்


OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2038 செப்டம்பர் 20, 2007 புரட்சி 5 முழக்கம் 38 விலை : ரூ.2.50

### பழ. நெடுமாறன் போராட்டம்: கழகத் தலைவர் அறிக்கை

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் தொடர்ந்து போராட்டத்தை நடத்தி வருவது - தமிழ்நாட்டில் தமிழின உணர்வாளர்களிடையேயும் உலகம் முழுவதும் உள்ள தமிழர்களிடையேயும் மிகுந்த கவலையை உருவாக்கியுள்ளது இதைத் தமிழர்கள் உன்னிப்பாகக் கவனித்து வருகிறார்கள்.

இந்திய அரசு - சிறிலங்கா இராணுவத்துக்கு இராணுவப் பயிற்சியையே அளிக்கிறது. ஆனால் பட்டினியால் வாடும் ஈழத் தமிழர்களுக்கு, தமிழர்கள் தாங்களாகவே முன்வந்து நன்கொடையாக வழங்கிய உணவுப் பொருள்களையும், மருந்துகளையும் அனுப்பு வதற்கு தடை போடுகிறது! அதுகூட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வழியாக அனுப்ப வேண்டும் என்பதுதான் தமிழர்களின் கோரிக்கை. இந்திய அரசே உணவுப் பொருள்களை அனுப்ப வேண்டும் என்றுகூட கோரவில்லை. சர்வதேச சட்டங்களே அனுமதிக் கும் இந்த மனித உரிமைச் செயல்பாட்டை ஏன் மத்திய அரசு மறுக்க வேண்டும்?

மத்திய அரசு வழக்கமான நடைமுறை களுக்குக் காத்திராமல், அவசரமாகத் தலையிட்டு செஞ்சிலுவைச் சங்கத்தின் வழியாக பொருள்களை அனுப்புவதற்கான அனுமதியை வழங்க வேண்டும். தமிழக முதல்வர், இதில் அவசரமாக தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(பழ. நெடுமாறன் பட்டினிப் போராட்டத்தை கை விடுவதற்கு முன் விடுத்த கொளத்தூர் மணி அறிக்கை)

### முஸ்லீம், கிறிஸ்தவர் இடஒதுக்கீடு; பெரியார் திராவிடர் கழகம் வரவேற்கிறது!

தமிழ்நாட்டில் முஸ்லிம்களுக்கு 3.5 சத வீதமும், கிறிஸ்தவர்களுக்கு 3.5 சதவீதம், பிற் படுத்தப்பட்டோருக்கான 50 சதவீத இட ஒதுக்கீட்டிலிருந்து உள் ஒதுக்கீடாக வழங்கி, தமிழக அரசு உத்தரவிட்டிருப்பதை பெரியார் திராவிடர் கழகம் பாராட்டி வரவேற்கிறது.

சமூக, கல்வி ரீதியாக பிற்படுத்தப்பட்ட மக்களாகவே இதன் மூலம் முஸ்லீம்களும், கிறிஸ்தவர்களும் அங்கீகரிக்கப்பட்டுள்ளார்கள். பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் முதன் முதலாக வாக்காளர் தொகுதியிலும், வேலை வாய்ப்பிலும் இடஒதுக்கீடு பெற்றவர்கள் முஸ்லீம்கள் தான். பார்ப்பன இந்தியாவில் இந்த உரிமை பறிக்கப்பட்டது. கேரளா, கருநாடகம், ஆந்திராவில், முஸ்லீம்களுக்கு இடஒதுக்கீடு ஏற்கெனவே அமுலில் உள்ள நிலையில் தமிழ்நாட்டில் மட்டும் இல்லாமல் இருந்த அவலம் இப்போது நீங்கியுள்ளது.

மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டை முதன்முதலாகக் கொண்டு வந்த முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள், முஸ்லீம், கிறிஸ்தவர் இடஒதுக்கீட்டையும் அறிமுகப்படுத்தி சாதனை புரிந்துள்ளார்.

### தி.க.விலிருந்து விலகி, கழகத்தில் இணைந்தனர்

நாமக்கல் மாவட்ட பெரியார் திராவிடர் கழகக் கூட்டம் ப.குமாரபாளையத்தில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் ஆக.26 மாலை நடந்தது. திராவிடர் கழகத்திலிருந்து விலகி - கலைமதி, சிவராசன், அசோக், ஈசுவரன், கோவிந்தன், சதிஷ், மாதேசுவரன், குமார், கார்த்தி, மணியம்மை, செல்வி ஆகிய தோழர்கள் பெரியார் திராவிடர் கழகத்தில் இணைந்தனர். களப்பணி ஒருங் கிணைப்பாளர் நங்கவள்ளி அன்பு கூட்டத்தில் பங்கேற்றார். கொளத்தூர் மணி இரண்டு மணி நேரம் சிறப்பாக உரையாற்றினார்.

# கழகம் எடுத்த பெரியார் விழாக்கள்

கழகம் நடத்திய பெரியார் பிறந்த நாள் விழாக்களின் செய்தி, படத்தொகுப்பு -

### சென்னை பெரியார் விழாவில் 'ராமன்' முகத்திரை கிழிப்பு

சென்னை மாவட்டக் கழக சார்பில் பெரியார் பிறந்த நாள் விழா சிறப்புடன் நடைபெற்றது. காலை 8 மணி யளவில் அண்ணா சாலையிலுள்ள பெரியார் சிலை அருகே, கழகப் பொறுப்பாளர்கள், துணைத் தலைவர் ஆனூர் செகதீசன், பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், கேசவன், தபசி குமரன், கருங்குழி கண்ணன், அன்பு தனசேகரன் உட்பட சுமார் 100 கழகத்தினர் திரண்டனர். அண்ணாசாலையில் உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து இரு சக்கர வாகனத்தில் ஊர்வலமாகப் புறப்பட்டு, பட்டாளம், சேத்துப்பட்டு, தியாகராயர் நகர், இராயப்பேட்டையில் உள்ள பெரியார் சிலைகளுக்கு மாலைகள் அணிவித்தனர்.



இராயப்பேட்டையில் அமைந்துள்ள பத்ரி நினைவு நூலகத்தில் சிந்தனைப் பலகையை விடுதலை இராசேந்திரன் திறந்து வைத்தார். திருவல்லிக்கேணி பகுதி அனுமந்தபுரத்தில் பெரியார் பிறந்த நாளையொட்டி தோழர் செல்வம் 'கேக்' வெட்டும் நிகழ்வுக்கு ஏற்பாடு செய்திருந்தார். தோழர்கள் அனைவருக்கும் பிரியாணி உணவு வழங்கப்பட்டது.

காலை நிகழ்ச்சிகள் பகல் ஒரு மணியளவில் முடிவடைந்தன. மாலையில் இராயப்பேட்டை பெரியார் சிலையருகே பெரியார் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம் எழுச்சியுடன் நடந்தது. கிருஷ்ணாம்பேட்டை நீலகண்டன் குழுவினரின் இசை நிகழ்ச்சியுடன் கூட்டம் தொடங்கியது. தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட கழகத் தோழர் ச. குமரன் தலைமை தாங்கினார். கழகத் தோழர்கள் எ.கேசவன், வழக்கறிஞர் இளங்கோ, அன்பு தனசேகரன், விடுதலை இராசேந்திரன் உரையாற்றினர்.

இறுதியில் கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன், 'இராமன்' புரட்டுகளை விளக்கிப் பேசினார். பொதுக் கூட்டத்தை மிகச் சிறப்பாக இராயப்பேட்டை பகுதித் தோழர்கள் ஏற்பாடு செய் திருந்தனர்.

விழாவில் வழக்கறிஞர் துரைசாமி உருவாக்கியுள்ள பெரியாரின் 'சமூக சீர்திருத்தம்' என்ற நூலை துணைத் தலைவர் ஆனூர் செகதீசன் வெளியிட, தோழர்கள் குமரன், முருகன், தமிழ்ச் செல்வம் பெற்றுக் கொண்டனர்.

1947 இல் 'இந்து' நாளேடு பெரியாரிடமிருந்து பெற்று வெளியிட்ட கட்டுரையை கடந்த ஆகஸ்டு 15 ஆம் தேதி மீண்டும் அந்த ஏடு வெளியிட்டிருந்தது. அதன் தமிழாக்கத்தை சமூக சீர்திருத்தம் - ஏன் என்ற பெயரில் சென்னை மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் சார்பில் வெளியிடப்பட்டுள்ளது.

கூட்டத்தில் கழகத்தின் வழக்கு நிதிக்காக மயிலை பகுத்தறிவுப் பாசறை சார்பில் தோழர் குமாரவேல் ரூ.2000 நிதியை பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரனிடம் அளித்தார். தோழர் கோ. சீனு நன்றி கூறினார்.



கோவையில் குருதி கொடை

தலையங்கம்

## அரசு திட்டங்களில் மத உணர்வு குறுக்கிடுவதா?

மீண்டும் 'ராமனை' வைத்து மதவாத சக்திகள் மிரட்டுவது, கண்டிக்கத்தக்கது என்றால், அந்த மிரட்டலுக்கு, மத்திய கூட்டணி ஆட்சி பணிவது வன்மையான கண்டனத்துக்கு உரியது. சேது சமுத்திரத் திட்டத்தை எதிர்த்து சுப்ரமணியசாமி உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்துள்ள வழக்கில், மத்திய அரசு தனது நிலையை விளக்கும் மனுவை தாக்கல் செய்துள்ளது. பா.ஜ.க.வினரும், 'சங் பரிவார்' களும் ஆதம் பாலம் என்று அழைக்கப்படும் மணல் திட்டு, 'ராமன்' கட்டிய பாலம் என்று கூறுவதை தொல் பொருள் ஆய்வுத் துறை மறுத்துள்ளது. இந்த மணல் திட்டு மனிதர்களால் கட்டப்பட்ட பாலம் அல்ல, அது இயற்கையாக உருவானது என்று தொல்பொருள் ஆய்வுத் துறை அறுதியிட்டுக் கூறுகிறது. மத்திய அரசு, இதைத் தனது மனுவில் கூறியுள்ளது. தொல் பொருள் ஆய்வுத் துறை தெரிவித்துள்ள மற்றொரு கருத்து மிக முக்கியமானது. ராமாயணத்தில் வரும் பாத்திரங்களோ அல்லது ராமாயணத்தில் வரும் சம்பவங்களோ, உண்மையாகவே நடந்தவை என்பதை நிரூபிக்கும் சான்றுகள் இல்லை" (There was no evidence to prove the existence of the characters or the occurrence of the events in the Ramayana) என்று தொல்பொருள் ஆய்வுத் துறை திட்டவட்டமாகக் கூறியுள்ளது. இதுமட்டுமன்றி, இந்திய புவியியல் ஆய்வு மய்யமும் (Geological Survey of India) 2002லிருந்து 2005 ஆம் ஆண்டு வரை இந்தப் பகுதியில் ஆய்வுகளை நடத்தி, ராமர் பாலம் என்று கூறப்படும் ஆதம் பாலம், இயற்கைப் படிமங்களால் உருவானது என்று தெளிவுபடுத்தியுள்ளது. (Adam's Bridge was a natural geological formation comprising compact clay, calcareous sandstone and fossibiferous lime stone) உச்சநீதிமன்றத்தில் - மத்திய அரசு, இந்த ஆய்வு மய்யங்களின் முடிவுகளை முன் வைத்து பதில் மனுவை தாக்கல் செய்தது. மதவாத பார்ப்பன சக்திகள் விஞ்ஞான அடிப்படையிலான ஆய்வுகளை செரிக்க முடியாமல் அலறினார்கள்.மிரண்டு போன மத்திய அரசு முதலில் ராமாயணம் நடந்த கதையல்ல, அதன் பாத்திரங்களும் கற்பனையானவை என்ற பகுதியை திரும்பப் பெறுவதாக அறிவித்தது. அடுத்த நாளே, மத்திய அரசு தாக்கல் செய்த முழுமையான பதில் மனுவையும் திரும்பப் பெறுவதாக 'பல்டி' அடித்து விட்டது. உண்மைகளை கூறியதற்காக இரண்டு தொல்பொருள் துறை அதிகாரிகள் பலிகடா ஆக்கப்பட்டுள்ளனர். இது உண்மையான கண்டனத்துக்குரியது. மூன்று மாதம் வரை, திட்டம் கிடப்பில் போடப்படும் என்றும் மத்திய அரசு அறிவித்துவிட்டது.

மதவெறி சக்திகளின் மிரட்டலுக்கு, மத்திய அரசு, இப்படிப் பணிந்து போனது, வாக்களித்த மக்களுக்கே இழைக்கப்பட்ட துரோகமாகும். கடந்த காலத்தில் பா.ஜ.க. ஆட்சியின் இத்தகைய மதவெறி அணுகுமுறைகளைப் புறந்தள்ளி விட்டு, மதச்சார்பற்ற ஆட்சி அமைய வேண்டும் என்றே மக்கள், அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியை வெற்றி பெற வைத்தார்கள் என்பதை ஆட்சியாளர்கள் மறந்துவிடக் கூடாது. பரவலாக மக்களிடையே உள்ள உணர்வுகளுக்கு எதிராக, அரசு செயல்பட விரும்பவில்லை என்று கூறி யிருப்பது, இன்னும் மோசமானது. பரவலாக மக்களிடையே உள்ள உணர்வு - 'ராமர் பாலம்' என்று ஒன்று இருந்தது என்று நம்புவதாகவே அரசு கூறுகிறது. இது தான் மக்களிடையே உள்ள பரவலான உணர்வு என்ற முடிவுக்கு இந்த ஆட்சி எப்படி வந்தது என்று கேட்கிறோம். தமிழ்நாட்டு மக்களின் நீண்டகால கோரிக்கை சேது சமுத்திரத் திட்டமாகும். மத உணர்வோடு மக்கள் எதிர்க்கிறார்கள் என்று எந்த அடிப்படையும் இல்லாமல், ஒரு கருத்தை மத்திய அரசு முன் வைக்கிறது. இதற்காக விஞ்ஞான பூர்வமாக தொல் பொருள் ஆய்வுத் துறையும் புவியியல் ஆய்வுக் கழகமும் ஆராய்ந்து அறிவித்த அறிவியல் உண்மைகளை திரும்பப் பெறுகிறது.

தமிழ்நாட்டில் 6 மாவட்டங்களில் மக்களின் கருத்துகளை கேட்டறிந்த பிறகே, இத்திட்டம் தொடங்கியது. 'ராமன்' கட்டிய பாலம் என்ற மதவெறிக் கண்ணோட்டம் - தமிழ்நாட்டில் மக்களிடையே கிடையாது. மத அரசியல் நடத்தத் துடிக்கும் சில சக்திகள் வேண்டுமானால் எதிர்க்கலாம். அது தமிழ்நாட்டுத் தமிழர்களின் பொதுவான கருத்து அல்ல. தமிழக அரசையோ, முதல்வரையோ கலந்து ஆலோசிக்காமல், மத்திய அரசு தன்னிச்சையாக இப்படி ஒரு முடிவை எடுப்பது நியாயமா என்ற கேள்வியையும் எழுப்ப வேண்டியிருக்கிறது. தொடர்புடைய துறையின் அமைச்சர் டி.ஆர். பாலுவிடம் கூட கலந்து ஆலோசிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. பார்ப்பன சக்திகள் வழக்கம் போல் ஆட்சி எந்திரத்தில் செல்வாக்குடன் இருப்பது உறுதியாகியிருக்கிறது!

இராமாயணம் 'நடந்தது' திரேதாயுகம் என்கிறார்கள். அதாவது 17.5 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு. அப்போது மனித இனமே உருவாகவில்லை. நவீன மனிதன் (Homo - Sapiens) உலகம் முழுதும் பரவ ஆரம்பித்ததே சுமார் ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முன்புதான். பிறகு எப்படி, ராமன் 17.5 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு பாலத்தைக் கட்டியிருக்க முடியும்?

அமெரிக்க விண்வெளி ஆய்வு மய்யமான 'நாசா' செயற்கைக் கோள் மூலம் படம் பிடித்து ராமன் பாலம் இருப்பது உண்மைதான் என்று கூறிவிட்டதாக ஒரு புரளியைப் பரப்பி வந்தார்கள். அதை 'நாசா' ஆய்வு மய்யம் மறுத்துவிட்டது.

காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே - பார்ப்பன மதவாத சக்திகள் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் பார்ப்பனக் குரலை உயர்த்தவே செய்கின்றன. ஜெய்ராம் என்ற பார்ப்பன அமைச்சர், கலாச்சாரத் துறை அமைச்சராக இருக்கும், அம்பிகா சோனி பதவி விலக வேண்டும் என்று கூறியிருப்பதை சுட்டிக் காட்டுகிறோம். ஒவ்வொரு குடிமகனிடத்திலும் அறிவியல் மனப்பான்மையை வளர்க்க வேண்டும் என்று அரசியல் சட்டம் கூறுகிறது. கொல்கத்தாவில் இந்திய அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கழகத்துக்கு அடிக்கல் நாட்டி - கடந்த ஜூலை 11 ஆம் தேதி பேசிய பிரதமர் மன்மோகன்சிங் -

"இந்தியாவின் எதிர்காலம், ஜவஹர்லால் நேரு கூறிய அறிவியல் மனப்பான்மையை உள்ளத்தில் நாம் பதிய வைப்பதைப் பொறுத்துத்தான் இருக்கிறது" என்று பேசினார். ஆனால்,

அறிவியல் உண்மைகளை மூடத்தன உணர்வுகளுக்காக விட்டுக் கொடுப்பதுதான் அறிவியல் மனப்பான்மையை வளர்ப்பதா, என்று கேட்கிறோம்?

பெரியார் இயக்கத்தின் ராமாயண - பார்ப்பன - மூடநம்பிக்கை எதிர்ப்புப் பிரச்சாரங்கள் சமுதாய முன்னேற்றத்திற்கு உரமூட்டக் கூடியவை என்பது இப்போதாவது புரிகிறதா?

மத்திய அரசின் இந்த பின் வாங்கும் நடவடிக்கைகளால் தமிழகத்துக்கு கிடைக்க வேண்டிய திட்டம் பறிபோவதை, தமிழர்கள் ஒரு போதும் அனுமதிக்க மாட்டார்கள்! தமிழ்நாட்டில் இராமகோபாலன்களின் இந்த மதவெறிப் பிரச்சாரத்தை தமிழக மக்கள் - மத நம்பிக்கையாளர்களாக இருந்தாலும்கூட எள்ளி நகையாடவே செய்வார்கள்.

வடநாட்டில் வேண்டுமானால் - மதவெறி சக்திகள் தோள் தட்டி, சூலாயுதம் தூக்கி நிற்கலாம்! அவர்களின் மிரட்டலுக்கு - தமிழ்நாடு பணிய வேண்டிய தேவையில்லை. அந்த மதவெறி சக்திகளை சுமந்து கொண்டு 'இந்தியனாக' இருக்கவும் தேவையும் இல்லை. இந்த மண்ணின் வாசனை தனித்துவமானது,

தமிழகத்தின் இந்த உணர்வுகளை - இந்திய அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

---

கழகத்துக்கு 'யாதும் ஊரே' பாராட்டு!

## "பெரியார் வழியில் போராடுகிறது"

'யாதும் ஊரே' செப்டம்பர் இதழில் கழகத்தைப் பாராட்டி எழுதியுள்ளதாவது:

*பெரியார் திராவிடர் கழகம் தீண்டாமையையும், அதற்கு உயிர் கொடுக்கும் சாதி அமைப்பையும் எதிர்த்து நாட்டின் அடிப்படையான முதலுரிமையும் முன்னுரிமையு மான 'இரட்டைக் குவளைப்' பிரச்சினையை முன்னெடுத்துள்ளது. ஆகஸ்டு 15 அன்று நடத்துவதாக இருந்த இரட்டைக்குவளை உடைப்புப் போராட்டம் 2007 அக்டோபர் 2 ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.*

*தேநீர் கடைகளில் இரட்டைக் குவளை, இரட்டை இருக்கை பற்றியும், தலித் மக்களை அனுமதிக்க மறுக்கும் பொதுக் கோயில்கள் பற்றியும் மாவட்டங்களிலுள்ள பெரியார் திராவிடர் கழகத்தினர் பட்டியல் தயாரித்துள்ளனர். இப்பட்டியல் தொடர்புடைய அரசுத் துறைக்கு முறைப்படி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும், இப்பட்டியலை அந்தந்தப் பகுதியின் காவல்துறையினர் கழகப் பொறுப்பாளர்களிடம் பெற்றுக் கொண்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். காவல்துறையினர் நேரில் சென்று, இரட்டைக் குவளைகளை உடனே அகற்ற வேண்டும் என்று எச்சரிக்கை செய்து வருகிறார்கள். இதனால், பல கடைகளில் இரட்டைக் குவளை முறை கைவிடப்பட்டுள்ளன.*

*இந்த நிலையில், 'தீண்டாமை' நிலவும் தேனீர்க் கடைகளின் முழுமையாக பட்டியலைத் தயாரிக்கவும், அரசு நடவடிக்கைகளை மேலும் தொடர கால அவகாசம் தரவும் ஆகஸ்டு 15 போராட்டத்தை மேலும் சுமார் ஒரு மாத காலம் தள்ளி வைக்க பெரியார் திராவிடர் கழகம் முடிவு செய்துள்ளது. இப்போராட்டம், தந்தை பெரியார் நடத்திய 'பிராமணாள் ஓட்டல்கள்' முன் நடத்தியதை நினைவுபடுத்துகிறது.*

*மேலும், தீண்டாமையின் வெளிப்பாடுகளாய் இரட்டைக் குவளை முறை, பொதுக் கோயில் நுழைவு மறுப்பு, முடித்திருத்தங்களில் புறக்கணிப்பு என்ற வடிவங்கள் போதிய எதிர்ப்பின்றி அதிகம் நிலவும் மேற்கு மாவட்டங்களில் இரண்டு கட்டமாகப் பிரச்சாரப் பயணம் மேற்கொள்ளவும் திட்டமிட்டுள்ளது.*

*"நாட்டின் வேரில் புகுந்த கேட்டை*
*எண்ணி எண்ணி*
*அழுது கொண்டிருப்பதால் பயன் என்?*
*பகையின் முதுகெலும்பு உடைத்து,*
*வரும் சாக்காட்டையும் வரவேற்க வேண்டும்!"*

*என்றார், புரட்சிக் கவிஞர். 'இரட்டைக் குவளை'யைப் பற்றிப் பல்வேறு அமைப்புகள் மேடைகளில் பேசின. ஆனால், பட்டியல் தயாரித்து, அரசுக்கு அனுப்பி வைத்து, காவல் துறைக்குச் செயல்பட வாய்ப்பளித்து, முறையாக, தந்தை பெரியார் வழியில் போராட்டத்தைத் தொடங்கியுள்ள பெரியார் திராவிடர் கழகத்தினரைப் பாராட்டுகிறோம்! தீண்டாமையைத் தீயிட்டுப் பொசுக்குவோம்!*

---

## பகவத் கீதை தேசிய நூலா?

காசியிலுள்ள ஒரு கோயிலின் சொத்து தொடர்பான வழக்கு அலகாபாத் உயர்நீதிமன்றத்துக்கு வந்தது. வழக்கை விசாரித்த எஸ்.என். ஸ்ரீவத்சவா என்ற பார்ப்பன நீதிபதி வழக்குக்குத் தொடர்பில்லாத ஒரு கருத்தை நீதிமன்றத்தில் கூறியிருக்கிறார். "பகவத் கீதையை தேசிய தர்ம சாஸ்திரமாக அறிவிக்கலாம்" என்று கூறியுள்ளார். உ.பி.யில் முஸ்லீம்கள் மைனாரிட்டிகள் அல்ல என்று ஏற்கனவே, தீர்ப்பு கூறியவரும், இதே நீதிபதி தான். "நான்கு வர்ணங்களை நானே படைத்தேன்" என்று கிருஷ்ண பகவான் கீதையில் கூறியதை வழி மொழிகிறார், இந்த நீதிபதி. அரசியல் சட்டத்தை அகற்றிவிட்டு மனு நீதியை சட்டமாக்கு என்று இனி, இவர்கள் பேசினாலும் வியப்பில்லை. அப்போதும் இராமகோபாலன்களும், சுப்ரமணிய சாமிகளும், ஜெயலலிதாக்களும், இந்த நீதிபதியின் 'தேசபக்தி'யைப் பாராட்டி அறிக்கைவிட்டாலும் விடுவார்கள். பார்ப்பனர்களின் கொழுப்பு எல்லை மீறுகிறது! இந்தியாவின் தேசியம் 'பகவத் கீதை'யில்தான் புதைந்திருக்கிறது என்று பார்ப்பனர்கள் பகிரங்கமாக வெளியே வந்து விட்டால், அந்த தேசியத்தில் தமிழனுக்கு இடமில்லை என்று தமிழர்கள் வெளியேற வேண்டியதுதான்!

---

### அப்பா மகன்

மகன் : 'ராமன்' கட்டிய பாலத்தை இடித்தால் 'இராம' பக்தர்களின் மனம் புண்படும் என்கிறார்களே!

அப்பா : ஆம், மகனே!

மகன் : பகவான் கிருஷ்ணன் தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான் என்று புராணம் கூறுகிறது. எனவே தூண்களை உடைக்கக் கூடாது. துரும்புகளை அகற்றக் கூடாது, செய்தால் எங்கள் மனம் புண்படும் என்று கிருஷ்ண பக்தர்களும் கூறுவார்களா, அப்பா?

அப்பா : எனக்குத் தெரியாது மகனே!

---

அணு ஆயுத ஒப்பந்தம் : கட்டுரைத் தொடர் அடுத்த இதழில்

# கிராமம் கிராமமாக இரட்டைக் குவளை எதிர்ப்புப் பிரச்சாரம்

**இரட்டைக் குவளை எதிர்ப்புப் பிரச்சாரப் பயணத்தின் இறுதி நாள் நிகழ்ச்சித் தொகுப்பு:**

பொள்ளாச்சி பேருந்து நிலையத்தில் நடைபெற்ற பிரச்சார பயண விளக்க பொதுக் கூட்டத்தில் பொள்ளாச்சி நகர செயலாளர் வெள்ளியங்கிரி வட்டாரச் செயலாளர் கா.சு. நாகராசன், பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் மற்றும் கழகத் தலைவர் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இந்நிகழ்வில் கோவை தெற்கு மாவட்ட செயலாளர் கருமலையப்பன், கோவை வடக்கு மாவட்டத்தலைவர் சு. துரைசாமி, பொள்ளாச்சி நகர துணை செயலாளர் இராசேந்திரன், பொருளாளர் கலை இராசேந்திரன், பகுத்தறிவாளர் பேரவை விசயராகவன், நகர செயலாளர் ஆனைமலை அரிதாசு மற்றும் தோழர்கள் திரளாக பங்கேற்றனர். ஆதித் தமிழர் பேரவை சார்பாக தி.செ. கோபால், மேற்கு மண்டல செயலாளர் செ.ப. வானுகன், கோவை தெற்கு மாவட்ட செயலாளர் சமரன், பொள்ளாச்சி வ. ஒ. அமைப்பாளர் தாமரை வீரன், மாவட்ட அவைத் தலைவர் தாமரை வீரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

11.9.07 அன்று செவ்வாய் கிழமை காலை 8.15 மணியளவில் துவக்கிய பிரச்சாரப் பயணத்தில் வெள்ளியங்கிரி விசயராகவன், கா.சு. நாகராசன், கொளத்தூர் மணி ஆகியோர் சிறப்புரையாற்றினர். ஆதித் தமிழர் பேரவை தோழர்கள் சிறப்பாக வரவேற்பளித்தனர். நெகமம் பகுதியை சேர்ந்த ஆதித் தமிழர் பேரவை சக்திவேல் அனைவருக்கும் தேநீர் வழங்கினார். இந்நிகழ்வில் லோக் சனசக்தி மாவட்டத் தலைவர் சி.எம். ஆறுச்சாமி, அம்பேத்கர் மக்கள் இயக்க மாவட்ட பிரதிநிதி இராமசாமி ஆகியோர் பங்கேற்றனர். கோவில்பாளையம் பகுதியில் 9.45 மணியளவில் நடைபெற்ற பயண விளக்கக் கூட்டத்தில் கா.சு.நாகராசு, வெள்ளியங்கிரி மற்றும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர்.

11 மணியளவில் தாமரைக் குளம் பகுதியில்நடைபெற்ற பயண விளக்கக்கூட்டத்தில் பகுத்தறிவாளர் பேரவை விசயராகவன் மற்றும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர். தினகரன் நிருபர் செந்தில் குமார் பயண நிதியாக ரூ.200 வழங்கினார்.

12 மணியளவில் கிணத்துக் கடவு பகுதியில் நடைபெற்ற பயண விளக்கக் கூட்டத்தில் வெள்ளியங்கிரி, கா.சு. நாகராசன், பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் மற்றும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர். ஆதித் தமிழர் பேரவையை சேர்ந்த சுப்பிரமணி, வெள்ளியங்கிரி, தி.மு.க.வை சேர்ந்த கொங்கு தமிழ் பித்தன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். தமிழ்ப்பித்தன் ரூ.500 நன்கொடை வழங்கினார். கிணத்துக் கடவு பகுதியில் கோவை தோழர்கள் கோபால், சாஜீத், கதிரவன், சோமு, சத்யா மற்றும் தோழர்கள் திரளாக கலந்து கொண்டு இரு சக்கர வாகனங்களில் அணிவகுத்து சென்றது, ஊர்வலம் போல் காட்சியளித்தது.

பேரூர் பகுதியில் 1 மணியளவில் நடைபெற்ற பயண விளக்கப் பொதுக்கூட்டத்தில் கோவை வடக்கு மாவட்டத் தலைவர் சு. துரைசாமி, பகுத்தறிவாளர் பேரவை விசயராகவன், பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் மற்றும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர். பேரூர் நகர தி.மு.க.செயலாளர் சுப்பிரமணியம், அண்ணாதுரை, தாமரைச் செல்வன், இரவி, மணிகண்டன் ஆகியோர் கலந்துகொண்டனர். மதிய உணவு வழங்கப்பட்டது. இராசாராம், மோகன் ஆகியோர் சிறப்பாக ஏற்பாடுகள்செய்தனர்.

2.30 மணியளவில் தொண்டாமுத்தூர் பகுதியில் நடைபெற்ற பயண விளக்கப் பொதுக் கூட்டத்தில் சு. துரைசாமி, கா.சு. நாகராசன், பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் மற்றும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர். இந்நிகழ்வில் தொண்டாமுத்தூர் பேரூராட்சி துணைத் தலைவர் இரவி (எ) கிருட்டிணசாமி, தி.மு.க. நகர செயலாளர் ஆயில் மில் கிட்டு, ம.தி.மு.க. கே.பி. சரவணன், தி.மு.க. ஒன்றிய பிரதிநிதி திருவேங்கடசாமி, தி.மு.க. நகர துணை செயலாளர் ஆப்ரகாம் பெருமாள் மற்றும் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மு.ப. நடராசன், தொ.ம. தியாகு, டி.என். சேகர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

3.45 மணியளவில் கலிக்க நாயக்கன் பாளையம் பகுதியில் நடைபெற்ற கூட்டத்தில் விசயராகவன், சு. துரைசாமி, வெ. ஆறுச்சாமி, கோவை இராம கிருட்டிணன், கொளத்தூர் மணி ஆகியோர் சிறப்புரை யாற்றினர். தோழர்கள் குமாரவேல், மூர்த்தி, வீரமணி, நாகராசு, இரவிச்சந்திரன், சம்பத், முருகன் உட்பட தோழர்கள் கலந்து கொண்டனர்.

4.15 மணியளவில் வடவள்ளி பேருந்து நிறுத்தத்தில் நடைபெற்ற கூட்டத்தில் விசயராகவன், பாண்டியநாதன் ஆகியோர் உரைக்குப் பின்பு பொதுச் செயலாளர் மற்றும் தலைவர் உரையாற்றினர். பகுதி கழகத்தோழர்கள் அசோக் குமார், அன்புக்கரசு, சண்முகசுந்தரம் ஆகியோர் சிறப்பாக ஏற்பாடுகள் செய்தனர். அனைவருக்கும் சிற்றுண்டி, குளிர்பானம் வழங்கினர்.

**பயணக் குழுவில் பங்கேற்ற தோழர்கள், பாடகர்கள்**

சமர்ப்பா குமரன், ஆறுமுகம், திருப்பூர் தியாகு, பிரவீன்கணேசு, முத்துராசு, பாண்டியன், சு. துரைசாமி, பாண்டியநாதன், சண்முகம், கோபிநாத் மூர்த்தி, இராமன், இலட்சுமணன், பல்லடம் விசயன், வடிவேல், குமார், ஆறுமுகம் மற்றும் பயணக் குழு ஒருங்கிணைப்பாளர் திருப்பூர் இராவணன்.

கணுவாய் பகுதியில் 5 மணியளவில் நடைபெற்ற கூட்டத்தில் பாண்டியநாதன், சு. துரைசாமி மற்றும் தலைவர் ஆகியோர் உரையாற்றினர். ஈசுவரன், ராசன், வெள்ளியங்கிரி, பரமேசு, மூர்த்தி மற்றும் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

6 மணியளவில் துடியலூர் பகுதியில் நடைபெற்ற கூட்டத்தில் இ.மு.சாஜித், சு. துரைசாமி, பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் மற்றும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரை யாற்றி னர். பகுதி தோழர்கள் டி.ஆர். இராசேந்திரன், இரா. இரவிச்சந்திரன், இரா. மனோகரன், செல்வராசு, சீவானந்தம், மணி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பெரிய நாயக்கன் பாளையத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பாண்டியநாதன், சு. துரைசாமி, தமிழ் தமிழர்இயக்கம் க. தேவேந்திரன், மேட்டுபாளையம் நகர செயலாளர் சந்திரசேகர் மற்றும் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் ஆகியோர் உரையாற்றினர். கழகத் தலைவர் புதிதாக அமைக்கப்பட்டிருந்த கொடி மரத்தில் கழக கொடியை ஏற்றி வைத்து உரையாற்றினார். இந்நிகழ்வில் மாவீரன் மதியழகன், சீனிவாசன், பிரசன்ன சுரேசு, ம.தி.மு.க. ஆறுமுகம், தி.மு.க. லோகநாதன், ம.தி.மு.க. தனபால், கவுன்சிலர் சிவராசு, சி.பி.எம். பாலமூர்த்தி ஆகியோர் ஏற்பாடு செய்தனர்.

7.45 மணியளவில் வீரபாண்டி பிரிவு பகுதியில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழ்நாடு மாணவர் குழு அமைப்பாளர் பன்னீர் செல்வம், ஆட்சி மன்றக் குழு உறுப்பினர் வெ. ஆறுச்சாமி, பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் மற்றும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர். நிகழ்ச்சியை பாபு ஏற்பாடு செய்தார்.

8.45 மணியளவில் நடைபெற்ற கூட்டத்தில் சு. துரைசாமி, பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் மற்றும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர். இந்நிகழ்வில் லோக் சனசக்தி மாநில செயலாளர் வை. குப்புராசு, அன்வர் ராசா, அருள் புஷ்பராஜ், விசய் யோவான் ஆகியோரும், பகுத்தறிவாளர் கழகத்தைச் சார்ந்த சி. துரைசாமி, வெற்றிச் செல்வன், மு. அப்துல் ரகுமான், கே. திருமூர்த்தி, ஆர். பிரபாகரன் ஆகியோர் கலந்து கொணடனர். சாலை வேம்பு, கருப்பசாமி மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

9.15 மணியளவில் மேட்டுப்பாளையம் பேருந்து நிலையத்தில் பிரச்சாரப் பயண நிறைவு விழா பொதுக் கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மேட்டுப் பாளையம் இராமச்சந்திரன் தலைமை தாங்கினார். சந்திரசேகர் வரவேற்புரையாற்றினார். இரும்பொறை சுந்தரமூர்த்தி, சு. துரைசாமி, பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் மற்றும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர். பயணக் குழுவில் கலந்துகொண்ட தோழர்கள் மற்றும் வாகன ஓட்டுனர், ஒலி பெருக்கிஅமைப்பாளர்கள் ஆகியோருக்கு கொளத்தூர் மணி சால்வை அணிவித்து சிறப்பு செய்தார். மக்கள் திரளாக கலந்து கொண்டனர். அனைத்து இடங்களிலும் சமர்ப்பா குமரன் குழுவினரின் எழுச்சி இசை நிகழ்ச்சி நடைபெற்றது. தோழர்கள் சந்திரசேகர், அமரன் மற்றும் கோவை மாநகர பொறுப்பாளர்கள், கோபால், கதிரவன், சாஜித், சோமு, பன்னீர்செல்வம், சத்யா மற்றும் தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

**செய்தி : இராவணன்**

# வனவாசியிலிருந்து - மேட்டூர் வரை வாகனப் பேரணி

தந்தை பெரியாரின் 129-வது பிறந்த நாளை முன்னிட்டு செப்.17 ஆம் நாளன்று சேலம் மாவட்டம் வனவாசியிலிருந்து மேட்டூர் வரை கழக கொடியேற்று விழா இரு சக்கர வாகன பேரணி எழுச்சியுடன் நடைபெற்றது.




திருப்பூரில்

காலை 10 மணிக்கு பறை இசையுடன் தொடங்கியது. வனவாசியில் தொடங்கிய பேரணியில் மாநில களப்பணி ஒருங்கிணைப்பாளர் அன்பு உரையாற்றிய பின் கொடியை ஏற்றி வைத்தார். பனக்காட்டூரில் சீனிவாசன், நங்கவள்ளியில் கிருஷ்ணன், ஆர்.சி. பிளாண்ட்டில் நாகராசு, இராமன் நகரில் பெரியசாமி, ஆர்.எஸ். பகுதியில் அசோக் குமார், என்.எஸ்.கே. நகரில் சதீஷ், தங்கமாபுரி பட்டணத்தில் முருகேசன், சேலம் கேம்ப்பில் விஜயகுமார், காந்தி நகரில் விஜய், காமராசர் நகரில் அருள்செல்வன், அனல் மின் நிலைய பகுதியில் சாதகப் பறவை சேகர், மாதையன் குட்டை பகுதியில் சித்ரா, பெரியார் தெருவில் இளவரசன், புதுக் காலனி யில் பிரகாசு, தூக்கணாம்பட்டியில் பிரவீன், காவேரி நகரில் வேணு, பழைய மார்க்கெட்டில் கணேஷ், சிறிய பூங்காவில் மார்ட்டின், பெரியார் நகரில் சுதாகரன், வீரபாண்டிய கட்டபொம்மன் நகரில் பாலு, பாரதி நகரில் செல்வம், திலீபன் நகரில் பூவழகன், பொன்னகரில் குமரப்பா, குமரன் நகரில் மோகன், சதுரங்காடியில் வேணு, மேட்டூர் பெரியார் பேருந்து நிலையத்தில் சக்திவேல், மேட்டூர் நகர படிப்பகத்தில் அண்ணா துரை ஆகியோர் கொடியேற்றினார்கள்.

மக்கள் கூடும் இடங்களில், நான்கு முனை சந்திப்பு களில் பறை இசையோடு அன்பு விளக்க உரையாற்றினார். தோழர்கள் கோவிந்தராசு, கணேஷ், பிரவீன் ஆகியோர் பறை இசைத்தனர். பேரணி நிகழ்ச்சி களை கோவிந்த ராசு ஒருங் கிணைத்தார். கொடியேற்றி அந்தந்த பகுதிகளுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

கழகத்தின் சார்பில் 2000 துண்டறிக்கை அடித்து மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது. 50-க்கும் மேற்பட்ட இரு சக்கர வாகனங்களிலும், 3 கார்களிலும் தோழர்கள் பங்கேற்றனர்.

சேலம் மாவட்ட இளைஞரணித் தலைவர் சக்திவேல்-அனிதா இணையரின் 4 வயது மகளான 'அறிவுமதி' அய்யாவைப் பற்றி பேசி, அய்யாவைப் பற்றி புரட்சிக் கவிஞர் எழுதிய பாடலை சொல்லி அனைவரையும் வியப்பிலாழ்த்தினார்.

# கனடாவில் ‘சோதிடப் புரட்டு’ நூல் அறிமுகம்

பெரியார் திராவிடர் கழகம் வெளியிட்ட ‘சோதிடப் புரட்டு’ நூல் அறிமுக விழா கடந்த 8.9.2007 அன்று கடனா தலைநகர் டொரன்டோவில் கந்தசாமி கோயில் மண்டபத்தில் எழுச்சியுடன் நடைபெற்றது. நூலாசிரியரும், ஈழத் தமிழரும் சீரிய பகுத்தறிவாளருமான நக்கீரன் எழுதிய நூல் இது. தமிழ் படைப்பாளிகள் கழகம் மற்றும் கனடாவிலிருந்து வெளிவரும் ‘முழக்கம்’ செய்தி இதழும் இணைந்து ஒழுங்கு செய்திருந்த இந்தக் கூட்டத்தில் கருத்துகளைக் கேட்க, மண்டபம் முழுதும் கூட்டம் நிரம்பி வழிந்தது. தமிழ் ஈழப் போராளிகளுக்கு வீர வணக்கம் செலுத்தி, நிகழ்ச்சி தொடங்கியது. சிறீலங்கா நாடாளுமன்ற உறுப்பினர் மா.க. ஈழவேந்தன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு நூலின் சிறப்புகள் குறித்தும், சோதிட மூட நம்பிக்கைகளைக் கண்டித்தும் பேசினார்.



நிகழ்வில் - ஒளிப்படம் ஒன்று திரையிடப்பட்டது. திருமகள் பாலகுமார் வடிவமைத்திருந்த அந்த ஒளிப்படம் - அண்டத்தின் தோற்றம், ஞாயிறு மண்டலத்தின் தோற்றம் அதனைச் சுற்றி வலம் வரும் கோள்கள், சூரிய, சந்திர மறைப்பு (கிரகணம்) பற்றிய விஞ்ஞான விளக்கங்களைத் தந்தது. முழக்கம் ஆசிரியர் திருமுருக வேந்தன், பொறுப்பாசிரியர் வானதி, சண்முகம் குகதாசன் ஆகியோர் நூலை ஆய்வு செய்தனர். நூலாசிரியரைப் பாராட்டி கவிஞர்கள் ரூபன் ரத்தினதுரை, அனகை இராசேந்திரம், இராசலிங்கம், சின்னத்தம்பி சண்முகராசா ஆகியோர் கவிதை படித்தனர். சோதிடப் புரட்டை விளக்கும் ‘யார் குழந்தை’ என்ற நாடகம் மேடையேறியது. இது சோதிடப் புரட்டு நூலில் இடம் பெற்றிருந்த உண்மை நிகழ்வாகும்.

“நான் பெரியார் அண்ணாவின் நூல்களைப் படித்து, மாணவப் பருவத்திலேயே பகுத்தறிவளராகி விட்டேன். எனக்கு தமிழினப் பற்றை ஊட்டியது இந்தத் தலைவர்களின் எழுத்துக்கள் தான். முடை நாற்றம் வீசும், மூட நம்பிக்கைச் சேற்றிலிருந்து தமிழ் மக்களை மீட்க வேண்டும். தமிழ்நாட்டிலிருந்து கனடாவுக்கு சோதிடர்கள் படை எடுக்கிறார்கள். இப்போது 17 சோதிடர்கள் இங்கே முகாமிட்டுள்ளனர். ஏமாந்த தமிழர்கள் தலையில், இவர்கள் மிளகாய் அரைக்கிறார்கள். தமிழனும் தலையை நீட்டக் காத்திருக்கிறான். தமிழ்நாட்டு சோதிடர்கள் மட்டுமின்றி, ஆந்திராவிலிருந்தும் வடமாநிலங்களிலிருந்தும் சோதிடர்கள் வரத் தொடங்கி விட்டார்கள். அடித்தளமே பிழையாக உள்ள போலி சாத்திரம் சோதிடம். இதை வைத்துத் திருமணப் பொருத்தப் பார்க்கலாமா? கல்வி, அழகு, செல்வம், குணம், நடை, குடி ஆகிய பொருத்தங்கள் இருபாலருக்குள் இருந்தும், கிரகப் பொருத்தம், நட்சத்திரப் பொருத்தம் இல்லை எனறு கூறி, திருமணம் தடுக்கப்படுகிறது. இது மிகப் பெரும் கொடுமை.

வானியல் அறிவே இல்லாத முட்டாள்கள், காட்டுமிராண்டிகள், மனம் போன போக்கில் கிறுக்கி வைத்ததே சோதிடம். நமது மண்ணும் மக்களும் விடுதலை அடைய வேண்டுமானால், தமிழ்ச் சமூகத்தை அறிவியல் சமூகமாக மாற்ற வேண்டும்” - என்று நக்கீரன் குறிப்பிட்டார்.

நூலை வெளியிட்ட பெரியார் திராவிடர் கழகம், தொடர்ந்து கட்டுரைகளாக வெளியிட்ட ‘முழக்கம்’ இதழுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார். புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களிடையே மூடநம்பிக்கையை எதிர்த்து ஒரு நூல் வெளி வருவதும், அதற்கு விழா நடப்பதும் இதுவே முதல் முறை என்று தெரிய வருகிறது.

பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் அனுப்பிய வாழ்த்துச் செய்தி, படிக்கப்பட்டது. இந்நிகழ்வில் பங்கேற்க விடுதலை இராசேந்திரன் அழைக்கப்பட்டிருந்தார். இந்தியாவின் கனட தூதரகம் ‘விசா’ வழங்க மறுத்து விட்டதால், அவரது பயணம் தடைபட்டது.

நூலாசிரியர் நக்கீரன் ஏற்புரை நிகழ்த்தினார்.

## சென்னை சிந்தனை வட்டம்

23.9.2007 ஞாயிறு மாலை 5 மணி அளவில் ‘பெரியார் திராவிடர் கழகம்’ அலுவலகத்தில் (1, காமராசர் சாலை, மயிலாப்பூர்) ‘இராமர் பாலம்’ ஒரு வரலாற்று மோசடி எனும் தலைப்பில் ஆனூர் கோ. செகதீசன் பேசுகிறார்.

## தோழர் வே. ஆனைமுத்து ‘வாழ்வும்-பணியும்’ நூல் தொகுப்பு வருகிறது

பேரறிஞர் தோழர் வே. ஆனைமுத்து அவர்களின் ‘வாழ்வும் பணியும்’ எனும் தலைப்பில் - நூற்றுக்கும் மேற்பட்டோர் எழுதும் கட்டுரைகளின் தொகுப்பு 2008 ஜூன் 21 இல் வெளியிட ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. சுமார் 500 பக்கங்களைக் கொண்ட இத்தொகுப்பின் விலை ரூ.300. முன் பதிவுத்திட்டத்தின் கீழ் ரூ.200-அய் கீழ்க்கண்ட முகவரியில் தோழர்கள் செலுத்தலாம்.

**சங்கமித்ரா (பா. இராமமூர்த்தி),**
1/429, தென் பெரும் நெடுஞ்சாலை,
வண்டலூர் வாயில், சென்னை-48.

தோழர் வே. ஆனைமுத்துவைப் பற்றி அறிந்தவர்கள் 5 பக்கங்களில் 150 வரிகளில் 1500 சொற்களில் கட்டுரைகளை மேற்குறிப்பிட்ட முகவரிக்கு எழுதி அனுப்பலாம். நூல் வெளியீட்டுக் குழு சார்பாக சங்கமித்ரா இதைத் தெரிவிக்கிறார்.

## பொழிலன், இளங்கோவுக்கு 10 ஆண்டு சிறை

கொடைக்கானல் தொலைக்காட்சி நிலையத்துக்கு குண்டு வைத்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் மதுரை உயர்நீதிமன்றம், தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கத்தின் செயலாளர் பொழிலன் மற்றும் இளங்கோவுக்கு 10 ஆண்டுகள் தண்டனை விதித்துள்ளது. தோழர்கள் குணத்தொகை, தெய்வமணி, ஈசுவரசன், குண்டலகேசி ஆகியோருக்கு ஓராண்டு தண்டனை வழங்கப்பட்டுள்ளது. குற்றம் சாட்டப்பட்டிருந்த தோழர்கள் முகிலன், அறிவழகன் ஆகியோர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று தோழர் பொழிலன் தெரிவித்துள்ளார். ஏற்கனவே திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றத்தில் அனைவருக்கும் ஆயுள் தண்டனை வழங்கியிருந்தது.

## மக்கள் தொலைக்காட்சியில் ‘வெங்காயம்’ தொடர்

மக்களிடம் மண்டிக் கிடக்கும் பல்வேறு மூடநம்பிக்கைகளை விளக்கும் தொடர் ‘வெங்காயம்’ எனும் தலைப்பில் மக்கள் தொலைக்காட்சியில் ஞாயிறு தோறும் பகல் 12 மணிக்கு ஒளிபரப்பாகிறது. சங்ககிரி ராசக்குமார் இத் தொடரை எழுதி இயக்கியுள்ளார்.

## வந்த கடிதங்கள்

### ‘இலட்சிய’ தி.மு.க.?

‘இலட்சிய தி.மு.க.’ என்ற கட்சியின் நிறுவனர் பொறுப்பில் இருக்கும் விஜய. டி.ராஜேந்தர் (டி.ஆர்.) அண்மையில் ஒரு பேட்டியில் தீவிர அரசியலிடல் ஈடுபடப் போவதாகக் கூறியுள்ளார். ‘ராமர்’ பாலத்தை இடிக்கக் கூடாது என்கிறார். அவரைப் பற்றி - சுப வீரபாண்டியன் திருப்பூரில் நடந்த நூல் வெளியீட்டு நிகழ்ச்சியில் ஒரு தகவலைக் கூறினார்.

விஜய. டி.ராஜேந்தர் ‘உயிருள்ளவரை உஷா’ என்ற பத்திரிகை நடத்திக் கொண்டிருந்த காலகட்டத்தில், ‘தின அரசன்’ என்ற பத்திரிகை நடத்தத் திட்டமிட்டார். அதற்காக பேராசிரியர் சுப. வீரபாண்டியன் அவர்களையும், திரு. பிரபஞ்சன் அவர்களையும் மற்றொரு நண்பரையும் அவருடைய இல்லத்திற்கு அழைத்திருந்தார்.

ஒரு ஞாயிற்றுக் கிழமை மாலை அவர்கள் பேசிக் கொண்டிருந்தனர். பேசிக் கொண்டிருந்தபோதே மாலை சரியாக 4.25 ஆனவுடன் விஜய. டி.ராஜேந்தர், சுப.வீ. மற்றும் நண்பர்களிடம் இதோ வந்து விடுகிறேன் என்று கூறிவிட்டு வீட்டின் ஒரு அறைக்குள் சென்று விட்டாராம். இவர்கள் டி.ஆர். தண்ணீர் குடிக்கவோ, கழிவறைக்கோ செல்கிறார் என்று நினைத்தார்களாம். 5 மணியைக் கடந்தப் பின்பும் வரவில்லையாம்.

அரை மணி நேரத்திற்கு மேல் ஆகியும் டி.ஆர். வராததால் அவர் வீட்டில் உள்ள பணியாளர் ஒருவரிடம் கேட்டதற்கு, பணியாளர் கேலியாக ஒரு சிரிப்பு சிரித்தாராம். இதில் ஏதோ உள்அர்த்தம் இருப்பதை உணர்ந்து மீண்டும் கேட்டபோது பணியாளர் கூறினாராம் - 4.30 மணி முதல் 6 மணி வரை இராகு காலம். இராகு காலத்தில் அவர் யாரோடும் பேச மாட்டார். தனியே ஒரு அறைக்குள் போய் அமர்ந்து கொள்வார் என்றாராம். இதைக்கேட்ட சுப.வீ., பிரபஞ்சன் மற்றும் உடன் இருந்த நண்பர்கள், 6 மணிக்கு மேல் அவர் யாரோடு வேண்டுமானாலும் பேசட்டும். நாங்கள் புறப்படுகிறோம் என்று கூறி எழுந்து வந்து விட்டார்களாம். இராகு காலத்தில் ஒரு செயலை செய்யாதவர்களைக்கூடப் பார்த்திருக்கிறோம். ஆனால் செய்து கொண்டிருக்கும் வேலையைப் பாதியில் நிறுத்திவிட்டு ஒரு அறைக்குள் ஓடிப்போய் யாரோடும் பேசாமல் தனியே அமர்ந்து கொள்ளும் மனிதப் பிறவிகளை இது வரையில் பார்த்ததில்லை. இவர் தான் லட்சிய தி.மு.க. நடத்துகிறாராம்! என்ன லட்சியமப்பா, இது?

**ப. வீரமணி, சூலூர்.**

### சிறைக் கைதியான திரவுபதி

சேலம் கந்தப்பட்டியில் திரவுபதி அம்மன் கோவில் அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ளது. இங்கு உள்ள தாழ்த்தப்பட்டவர்கள் கோவிலில் நுழைய பிற சாதியினர் அனுமதி மறுத்து வந்தனர். எனவே இம்மாதம் ஆறாம் தேதி கோவில் நுழைவுப் போராட்டம் நடத்தப் போவதாக விடுதலை சிறுத்தைகள் அறிவித்திருந்தனர். மாவட்ட ஆட்சித் தலைவர் இரு தரப்பினரிடமும் பேச்சு வார்த்தை நடத்தியும் சுமூக முடிவு ஏற்படாததால் கோவில் 4.8.2007 அன்று பூட்டி சீல் வைக்கப்பட்டது.

மேல் சாதி, கீழ் சாதி என்று சண்டையிடும் மனிதர்களுக்கு நல்ல அறிவைப் புகட்டாமல் வேடிக்கை பார்க்கும் கடவுளை, சிறை கைதியை போல் பூட்டி சீல் வைத்த பிறகும் அமைதியாகவே இருக்கும் கற்சிலையை இனியும் இந்த சமுதாயம் சக்தி இருப்பதாக நம்பலாமா?

**- அ. கோகுல கண்ணன், இளம்பிள்ளை, சேலம்.**

### பாராட்டுக்கள்!

திரு. கி. வீரமணியை மிகச் சரியாக (நாகரிகம் கருதி கொள்கைப் பரப்புச் செயலர் என்று) மதிப்பிட்டிருந்த மருத்துவர் திரு. இராமதாசின் ‘நக்கீரன்’ பேட்டியை 6.9.07 இதழில் வெளியிட்டமைக்கு பாராட்டுக்கள்.

**இர. மருதசாமி, மயிலாடுதுறை.**


**பெரியார் திராவிடர் கழக**
**புதிய அலுவலக முகவரி:**
1, காமராசர் சாலை,மயிலாப்பூர்,
சென்னை - 600 004.
**தொலைபேசி 044-42702230**

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
*தொடர்புக்கு: ஆசிரியர்,*
*29, பத்திரிகையாளர் குடியிருப்பு,*
*திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,*
*சென்னை-41. ✆ 2451 2857*

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 21st September 2007

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2038 செப்டம்பர் 27, 2007 புரட்சி 5 முழக்கம் 39 விலை : ரூ.2.50


## இதுதான் இராமாயணம் இவன் தான் 'ராமன்'

இராமாயணத்தில் அவரவர் சாதிகளையும், பிரிவுகளையும் தானே நிலைநாட்டுகிறது?

- ஒரு இடத்தில் அனுமார் இராமன் காலில் விழுகிறான். இராமன் அனுமாரைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு மன்னிப்புக் கேட்கிறான். 'நீயோ ஒரு பிராமணன். நான் க்ஷத்திரியன். என் காலில் வந்து விழலாமா? இந்தப் பாவத்தை நான் எங்கே போய்த் தீர்ப்பேன்?" என்று கூறுகிறான்.
- இராமன் அயோத்தியில் இருந்து காட்டுக்குப் புறப் படும் சமயம், "என் பணத்தை யும், சொத்துக்களையும், என்னிடத்தில் இப்போது இருக்கும் மாடுகளையும் கொண்டு வாருங்கள். முழு வதையும் பிராமணருக்குக் கொடுத்து விடுகிறேன்!" என்பதாகச் சொல்லுகிறான்.
- சீதை, "என் நகைகள் முழுவதை யும் கொண்டு வாருங்கள். பிராமணனுக்குக் கொடுத்து விட்டுப் போனால் புண்ணியம்" என்பதாகச் சொல்கிறாள்.
- சூர்ப்பனகை, 'என்னைத் திருமணம் செய்துகொள்' என்று கேட்கும்போது, 'நீ ஒரு சாதி, நான் ஒரு சாதி, எப்படித் திருமணம் செய்து கொள்வது?' என்கிறான்.
- ஒரு இடத்தில் தாடகை மகனை இலட்சுமணன் கொன்றுவிட்டு, 'இந்தப் பாவத்திற்கு என்ன செய்வேன்?' என்று வருத்தப் பட்டுக் கொள்கிறான். அதற்கு இராமன், 'சூத்திரனைத் தானே கொன்றாய், அதனால் பாவ மில்லை கவலையை விடு' என்று கூறுகிறான்.
- சம்பூகன் ஒரு சூத்திரன். அவன் தவம் செய்ய உரிமையில்லை என்று கூறி அவனைக் கண்டங் கண்டமாக வெட்டி விடுகிறான். இப்படி எங்கு பார்த்தாலும் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் வருணாசிரம தர்மம் தாண்டவ மாடுகிறது. இப்படி இருக்கும் இராமாயணத்தைக் கொளுத்த வேண்டும் என்பதில் என்ன தப்பு?"

**(பெரியார், 'விடுதலை' 13.9.56)**

### கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிக்கை:

# இரட்டைக் குவளை உடைப்புக் கிளர்ச்சிக்கு தயாராவீர்!

கழகத் தலைவர் கொளத்தூர் மணி விடுத்துள்ள அறிக்கை:

அன்புத் தோழர்களுக்கு,

வணக்கம். தஞ்சை சாதி ஒழிப்பு மாநாட்டு தீர்மானத்தையொட்டி வருகிற அக்.2 ஆம் நாள் கழகம் நடத்தவுள்ள இரட்டைக் குவளை உடைப்பு போராட்டம் குறித்து சில கருத்துக்களை உங்கள் கவனத்துக்கும் செயற்பாட்டுக்கும் முன் வைக்க விரும்புகிறேன்.

இரட்டைக் குவளை இருக்கிற கடை குறித்து கழகத் தோழர்கள் திரட்டிக் கொடுத்த பட்டியல்களை நமது 'புரட்சிப் பெரியார் முழக்கம்' ஏட்டில் வெயிடப்பட்டதைத் தொடர்ந்து, அதுவரை கடமை உணர்வற்று சோம்பிக் கிடந்த தீண்டாமை ஒழிப்புக் காவல் பிரிவும், பிற அரசு அலுவலர்களும் சுறுசுறுப்பாக செயல்பட்டு கைது, வழக்குப் பதிவு, எச்சரிக்கை போன்ற முறைகளைக் கையாண்டு பட்டியல் வெளியிடப்பட்ட இடங்களில் பின்பற்றப்பட்டு வந்த இரட்டைக்குவளை முறையைக் கைவிடச் செய்திருக் கிறார்கள்.

ஆனால், பாராட்டத்தக்க இந்த நடவடிக்கைகளுக்குப் பின்னரும் நம் கவனத்துக்கு வராத சில இடங்களிலும் வீம்பாக சில இடங்களிலும் சட்ட விரோதமாக இம்முறை தொடர்வதாக அறிகிறோம்.

கழகப் பொறுப்பாளர்களும், தோழர்களும் அவை குறித்த தகவல்களை உரிய அதிகாரிகளின் கவனத்துக்கு உடனே கொண்டு செல்லுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

அதன் பின்னரும் இரட்டைக்குவளை முறை தொடரும் கடைகளை அறிந்து, வருகிற 2.10.2007 அன்று அவ் வாறான கடைகளில் மக்கள் கவனத்தை ஈர்க்கும் இடத் தில் அமைந்துள்ள கடையை/கடைகளை தேர்ந்தெடுத்து இரட்டைக் குவளை உடைப்புப் போராட்டம் நடத்த முடிவெடுக்குமாறு வேண்டுகிறோம்.

ஒருவேளை ஒரு மாவட்ட எல்லையில் அவ்வாறான கடை எதுவும் இல்லை என்றாலும் மாவட்டத் தலைநகரிலோ /வாய்ப்புள்ள இடங்களிலோ இரட்டைக் குவளை முறை, முடித்திருத்தகங்கள், பொதுக் கோவில்களில் அனுமதி மறுப்பு, பஞ்சமி நில அபகரிப்பு ஆகிய சமுதாயக் கொடுமைகளுக்கு எதிரான ஆர்ப்பாட்டமாக நடத்துமாறும் கேட்டுக் கொள்கிறோம்.


அப்போராட்டங்களுக்கு காவல்துறைக்கு அறிவித்தல், அனுமதி, போராட்டத்தை விளக்கும் துண்டறிக்கைகள் வெளியீடு, பதாகைகள், உடன்பாடுள்ள அமைப்புகளின் ஆதரவு/பங்கேற்பு போன்ற ஏற்பாடுகளை உடனே செய்திடுமாறும் வேண்டுகிறோம்.

போராட்டம், ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்ட செய்திகளை புகைப்படங்களுடன் உடனடியாக செய்தி ஏடுகளுக்கும், குறிப்பாக 'புரட்சிப் பெரியார் முழக்க'த்துக்கும் அனுப்பி வைக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்த விரும்புகிறோம்.

இவ்வாறு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### சேலம் சம்பவத்தை சுட்டிக்காட்டி 'டைம்ஸ் ஆப் இந்தியா' கட்டுரை

# 'ராமர்' அரசியல் தமிழகத்தில் வெற்றி பெறாது



'ராமன்' அரசியல் தமிழகத் தில் வெற்றி பெறாது. தமிழ் நாட்டில் வாழும் மெஜாரிட்டி 'இந்துக்கள்' பார்ப்பனரல்லாதவர் என்ற உணர்வுள்ளவர்கள் என்று, 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேட்டில் (24, செப்.2007) சமூக ஆய்வாளர் முனைவர் எம்.எஸ்.எஸ். பாண்டியன் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அதன் தமிழ் வடிவம்:

தமிழக முதலமைச்சர் தி.மு.க. தலைவர் கருணாநிதியைப் பொறுத்தவரை, ராமன் வரலாற்று நாயகன் அல்ல. அவன் மனி தனின் கற்பனையில் உருவாக்கப் பட்ட பாத்திரம் என்பதே அவரது கருத்து. ராமன், ஒரு வரலாற்றுப் பாத்திரம் என்று, அத்வானி தன் னுடன் விவாதிக்கத் தயாரா என்று அவர் சவால் விட்டதோடு மட்டுமல்ல, வால்மீகி ராமா யணத்தை உன்னிப்பாகப் படித்துப் பாருங்கள் என்று, அத்வானிக்கு அறிவுரை கூறியிருக்கிறார். இது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்றதாகிவிட்டது. கருணாநிதிக்கு, ராமாயணம் நன்றாகவே தெரியும் என்பது - தமிழ்நாட்டு மக்களுக்குப் புரியும். கருணாநிதியின் கருத்து - அத்வானி சகாக்களை கந்தகமாக சூடேற்றி யிருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டு இந்துக்களை - கருணாநிதிக்கு எதிராக திருப்பிவிடும் முயற்சிகளில் 'எள் மூக்கு முனை அளவுகூட அவர்கள் வெற்றி பெறவில்லை. அந்த விரக்தி நன்றாகவே தெரிகிறது. பா.ஜ.க.வின் பேச்சாளர் முக்தர் அபாஸ்நக்வி - அளித்த பேட்டி ஒன்றில் கருணாநிதி தனது தலைமையையே இழந்து விட்டதாகக் கூறினார். அவரது தொண்டர்கள், ராமனைக் குறை கூறிய தால், அவர் தலைமையை ஒதுக்கி விடுவார்கள் என்று கருதியிருக்கிறார் போலும்! ஆனால், அப்படி ஏதும் நடக்க வில்லை. தி.மு.க.வில் முழுமையான பகுத்தறி வாளர்கள் என்பவர்கள் வெகு குறைவுதான். பெரும்பான்மையான தி.மு.க. தொண்டர்களும், ஆதரவாளர் களும் 'பார்ப்பனரல்லாத இந்துக் களாகவே' வாழ்கிறார்கள். கோயிலுக் குப் போவதையும், வழிபடுவதையும், வழக்கமாகக் கொண்டுள்ளார்கள். கருணாநிதி ராமனை ஏற்றுக் கொள்ளாதவர் என்று தெரிந்தும், அவர்கள் அவரைத் தலைவராக ஏற்றுக் கொள்வதற்கு வேறு காரணங்கள் உண்டு. முதலில், கருணாநிதி ராமனை எதிர்த்துப் பேசுவது ஒன்றும் புதுமை யானதல்ல. பெரியார் ஈ.வெ.ராமசாமி சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கிய காலத்திலிருந்தே தமிழ்நாட்டில் ராமாயணமும், ராமனும் மக்கள் மன்றத்தில் கடும் விவாதத்துக் குரியவைகளாகிவிட்டன.

தமிழ்நாட்டில் ராமாயணத்தை விமர்ச்சிக்கும் பார்ப்பனரல்லாதோர்

6 ஆம் பக்கம்

**தலையங்கம்**

# தீவிரப் பிரச்சாரம் தேவை!

அயோத்தியில் 'ராமன்' பிரச்சினையை முன் வைத்து அரசியல் நடத்தியவர்கள் - தேர்தலில் கடும் தோல்வியை சந்தித்து, மக்களால் புறக்கணிக்கப்பட்ட நிலையில் பா.ஜ.க. பரிவாரங்கள் முடங்கிப் போய்க் கிடந்தன. அக்கட்சிக்குள்ளே குழப்பங்கள் பகிரங்கமாக வெடிக்கத் தொடங்கின. 'அயோத்தி' அரசியலுக்குப் பிறகு முடங்கிப் போனவர்கள், அடுத்து 'இராமனை' சேது சமுத்திரத் திட்டத்துக்குள் தேடிப் பிடித்து, அதை அரசியலாக்கி, கரை சேர முடியுமா என்று புறப்பட்டிருக் கிறார்கள். 'ராமன்' அரசியலுக்கு தமிழ்நாட்டைத் தேர்ந்தெடுத்திருப்பது இவர்களின் அறியாமையையே காட்டுகிறது.

தமிழ்நாட்டில் - 'இந்து'வாகக் கருதிக் கொண்டு, பக்தி, சடங்குகளில் மூழ்கியிருப்பவர்கள்கூட, 'இராமனை' ஏற்கத் தயாராகஇல்லை என்ற கருத்தை முன்னிறுத்தி, சமூக ஆய்வாளர் முனைவர் எம்.எஸ்.எஸ். பாண்டியன், ஆங்கில நாளேடு ஒன்றில் எழுதிய கட்டுரையை இதே இதழில் வெளியிட்டிருக்கிறோம்.

1971 இல் சேலத்தில் பெரியார் நடத்திய ஊர்வலத்தில் 'ராமன்' செருப்பால் அடிக்கப்பட்டதை - தேர்தல் களத்தில் முன்னிறுத்தப்பட்ட போதும், பெரும்பான்மை மக்கள், 'ராமனை' புறக்கணித்து தி.மு.க.வையே வெற்றி பெறச் செய்த வரலாற்று நிகழ்வை கட்டுரையாளர் சுட்டிக் காட்டியிருக்கிறார். இது மிகச் சரியான படப்பிடிப்பு என்பதில் இரண்டு கருத்துகளுக்கு இடமில்லை.

அதே நேரத்தில் - இந்து மதத்தை பழக்கத்தால் ஏற்றுக் கொண்டு வாழ்வோரும்கூட, பார்ப்பனரல்லாத 'இந்து' என்ற உணர்வோடு வாழ்வதற்கும், இந்து மதத்தின் 'பார்ப்பனக் கூறுகளை' உதறித் தள்ளுவதற்கும், அடிப்படையான காரணம் - பெரியார் இயக்கமும், அதன் வழிவந்த திராவிடர் இயக்கமும் தான். இந்த இயக்கம் பகுத்தறிவையும், சுயமரியாதையையும், வகுப்புரிமையையும், மூட நம்பிக்கை எதிர்ப்பையும், பார்ப்பன எதிர்ப்பையும், விதைத்ததினால், கிடைத்த விளைச்சல் தான் இந்த உணர்வு.

தமிழ் மண்ணின் - இந்த தனித்துவமான உளவியல் தொடர்ந்து பாதுகாக்கப்படவேண்டுமானால், பார்ப்பன எதிர்ப்பும், ராமாயண புராண எதிர்ப்பும், பகுத்தறிவுக் கருத்தும் தொடர்ந்து மக்களிடையே பரப்பப்பட வேண்டும் என்பதை அழுத்தம் திருத்தமாக வலியுறுத்திக் கூற விரும்புகிறோம்.

பகுத்தறிவு, சுயமரியாதைப் பிரச்சாரம் செய்வது, ஏதோ பெரியார் இயக்கங்களுக்கு மட்டுமே உள்ள கடமை என்ற நிலை வந்துவிட்டது. தொடக்கக் காலங்களில் திராவிட முன்னேற்றக் கழகம், சுயமரியாதை, பகுத்தறிவு கருத்துப் பரப்பல்களில் காட்டிய தீவிரமும், ஆர்வமும் படிப்படியாக மங்கி, இப்போது தேர்தல் அரசியல் என்ற ஒற்றை இலக்கு நோக்கியே செயல்பட்டு வருவது வேதனைக்குரியது. முனைவர் எம்.எஸ்.எஸ். பாண்டியன் சுட்டிக் காட்டிய தமிழ்நாட்டின் 'தனித்துவம்' இத்தகையப் பிரச்சாரம், தமிழகத்தில் ஆழமாக வேரூன்றியதன் விளைவுதான் என்பதை மறந்துவிடக் கூடாது.

1971 ஆம் ஆண்டு - தமிழ்நாட்டில் வேர் பிடிக்க முடியாத பார்ப்பன மதவாத சக்திகள், இப்போது தமிழகத்தில் தலைதூக்கி நிற்கும் 'எதார்த்தத்தை' கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். இன்றைக்கு திராவிட அரசியல் கட்சிகளிலேயே திராவிடர் இயக்கக் கொள்கைகளோடு, ஓரளவு நெருக்கமாக இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்திலேயே 40 வயதுக்கு உட்பட்ட பெரும்பாலான இளைஞர்கள் பகுத்தறிவு சிந்தனையுடனோ, சுயமரியாதை இயக்கக் கொள்கையுடனோ இருக்கிறார்களா என்றால் இல்லை என்றுதான் கூற வேண்டும். இது கசப்பான உண்மை.

இந்த நிலை தொடர்ந்தால், 'பார்ப்பனரல்லாத இந்துக்களை' - பார்ப்பனிய ஆதரவு இந்துக்களாக மாற்றக் கூடிய ரசாயன மாற்றம், வெகு எளிதில் நடந்து முடிந்துவிடும் என்பதில் அய்யமில்லை.

அத்தகைய மாற்றம் நேர்ந்து விடும்போது - திராவிடர் இயக்கத்தின் அடித்தளமே தகர்ந்து தரை மட்டமாகிவிடும் ஆபத்துகள் வரக் கூடும். தமிழக அரசியலில் ஆட்சி அதிகாரத்தைக் குறி வைத்து - சில நடிகர்களால் தொடங்கப்பட்டுள்ள புதிய அரசியல் கட்சிகள்கூட - 'இந்து'த்துவா வாடையுடன், பகிரங்கமாக வெளிவந்து கொண்டிருப்பதை, ஆபத்தின் அறிகுறிகளாகவே பார்க்க வேண்டும். தமிழ்நாட்டின் இடதுசாரி கட்சிகளுக்கும், தலித் அமைப்புகளுக்கும் அவர்கள் மதவாத சக்தியை எதிர்க்கிறவர்கள் என்ற முறையில் இதில் பொறுப்பு இருக்கிறது.

தமிழ்நாட்டில் மீண்டும் - ராமாயண, புராண எதிர்ப்பு, மூடநம்பிக்கை எதிர்ப்பு, பகுத்தறிவுப் பிரச்சாரம் என்ற செயல்தளத்துக்கு முற்போக்கு சக்திகள் வந்தாக வேண்டிய நேரம் வந்துவிட்டது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இந்தக் கருத்துப் பரப்பல் தி.மு.க.வையோ, இடதுசாரி கட்சிகளையோ, முற்போக்கு இயக்கங்களையோ பலவீனப்படுத்தி விடாது. மாறாக அவர்களின் இயங்குதளத்தை உறுதிபடுத்தவே செய்யும். தமிழ்நாட்டின் தனித்துவத்தை இளைய தலைமுறையிடம் நிலைநிறுத்தும்.

முனைவர் எம்.எஸ்.எஸ். பாண்டியனின் கட்டுரையை ஆழமாகப் பரிசீலித்தால் - அதில் இந்த எச்சரிக்கையும் அடங்கியிருப்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

## ராமனே பொய்யடா, ராமன் பாலம் ஏதடா?

# சென்னையில் கழகம் ஆர்ப்பாட்டம்

முதல்வர் கலைஞர் தலைக்கு விலை வைத்த - கொலை வெறி பிடித்த பார்ப்பன மதவெறி சக்திகளை எச்சரித்தும், மக்கள் நலத் திட்டங்களை மதத்தைக் காட்டி முடக்குவதைக் கண்டித்தும் - பெரியார் திராவிடர் கழகம் சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்தியது. செப்டம்பர் 24 ஆம் தேதி மாலை 4 மணியளவில் சென்னை மெமோரியல் ஆல் அருகே நடந்த ஆர்ப்பாட்டத்தில் கழகத் தோழர்கள் கலந்து கொண்டு,




மதவெறி சக்திகளுக்கு கடும் எச்சரிக்கை செய்து முழக்கமிட்டனர். ஆர்ப்பாட்டத்தில் எழுப்பப்பட்ட முழக்கங்கள்:

இராமன் கதையே பொய்யடா...
இராமன் பாலம் ஏதடா...?

பாராட்டுகிறோம்! பாராட்டுகிறோம்!
சேது சமுத்திர திட்டத்தை
விரைந்து முடிப்போம் என்று சொல்லும்
மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலுவை
பாராட்டுகிறோம்! பாராட்டுகிறோம்...

இராமன் கதை பொய் என்று
நீதிமன்றத்தில் தாக்கல் செய்த
மனுவை... திரும்பப் பெற்ற...
மத்திய அரசை கண்டிக்கிறோம்

மத்திய அரசே! மத்திய அரசே!
தாக்கல் செய்! தாக்கல் செய்!

இராமன் கதை கற்பனை என்ற
மனுவை தாக்கல் செய்.
உன்னால் வாதாட முடியா விட்டால்
நாங்கள் வாதாடுகிறோம்.

கைது செய்! கைது செய்!
கலைஞர் தலைக்கு விலை பேசிய
மதவெறிப் பிடித்த வேதாந்தியை
கைது செய்! கைது செய்!

கலைஞர் தலைக்கு குறி வைத்தால்
சங்கராச்சாரி தலை தப்பாது.

ஏற்க மாட்டோம்! ஏற்க மாட்டோம்!!
சேது சமுத்திரத் திட்டத்தின்
மாற்றுப் பாதையை ஏற்க மாட்டோம்!

- என்ற முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

ஆர்ப்பாட்டத்துக்கு தலைமை ஏற்ற பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், துணைத் தலைவர் ஆனூர் செகதீசன், வழக்கறிஞர் துரைசாமி ஆகியோர் உரையாற்றினர். "திராவிட முன்னேற்றக் கழகம், சுயமரியாதைக் கருத்துக்களை மக்களிடம் எடுத்துச் செல்ல தவறிவிட்டது. அதனால்தான், தமிழ்நாட்டில், இந்து மதவெறி பார்ப்பன சக்திகள், இந்த நிலைக்கு வளர்ந்துள்ளன. அந்தத் தவறை தி.மு.க தொடர்ந்து செய்யக் கூடாது. தி.மு.கழகத்தின் அடித்தளமாக இருப்பதே, சுயமரியாதை பகுத்தறிவுக் கருத்துகள் தான். அந்த அடித்தளம் தகர்ந்து விட்டால், தி.மு,.க. அரசியலில் நிலைத்துவிட முடியாது" என்று வழக்கறிஞர் துரைசாமி சுட்டிக்காட்டினார்.

பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் பேசுகையில், "பெரியார் சிலையை உடைக்கக்கூடிய துணிவு தமிழ்நாட்டில் மதவெறி சக்திகளுக்கு வந்துவிட்டது. அப்போதுதான் பெரியார் திராவிடர் கழகம் பார்ப்பன மதவெறி சக்திகளுக்கு பதிலடி தந்தது. ஆனால், கலைஞர் அவர்களின் ஆட்சி, எங்கள் தோழர்களை தேசப் பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்து, தேச விரோதிகள் என்று முத்திரை குத்தியது. அதே மதவெறி சக்திகள்தான், இப்போது கலைஞரின் தலைக்கு விலை வைக்கின்றன. பார்ப்பன மதவெறி சக்திகளுக்கு பதிலடி தந்த எங்கள் தோழர்கள் மீது, தி.மு.க. ஆட்சியில் தேசப் பாதுகாப்புச் சட்டம் பாய்ந்தாலும் கூட, கலைஞருக்கு அதே சக்திகளால் மிரட்டல் வந்தால், நாங்கள் கலைஞருக்கு ஆதரவாக, மத வெறி சக்திகளை எதிர்த்து நிற்போம்" என்று குறிப்பிட்டார்.

17 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு திரேதாயுகத்தில் ராமன் பிறந்ததாகக் கூறிக் கொண்டு, அந்த இராமன் கடலுக்கு அடியில் பாலம் கட்டினான் என்று கூறி, சேது சமுத்திரத் திட்டத்தை முடக்குவது வெட்கக் கேடானது, ஈனத் தனமானது என்று ஆனூர் செகதீசன் குறிப்பிட்டார். இராமாயண எதிர்ப்புப் பிரச்சாரத்தைக் கழகம் தீவிரமாக நடத்தும் என்றும் அறிவித்தார். கழகப் பொறுப்பாளர்கள் வழக்கறிஞர் இளங்கோ, கேசவன், தபசிகுமரன், குமரன், செ.குமரன், தமிழ், அண்ணாமலை, டேவிட் பெரியார் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

### மற்றொரு மதவெறியரும் - கலைஞர் 'தலை'யைக் கேட்கிறார்

*பாரதிய ஜனதா கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், விசுவ இந்துபரிஷத்தின் கேந்திரிய மார்க்தர்சக் மண்டல் எனும் அமைப்பின் தலைவருமான ராம் விலாஸ் வேதாந்தி என்பவர், தமிழக முதல்வர் கலைஞர் தலையையும், நாக்கையும் துண்டிப்பவர்களுக்கு அயோத்தியிலுள்ள சாமியார்கள் தங்கம் பரிசு வழங்குவார்கள் என்று அறிவித்தது, தமிழ்நாட்டில் பெரும் பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளது.*

*இப்படி, ஒரு கொலை வெறியைப் பிரகடனப்படுத்தியவர், இவர்ஒருவர் மட்டுமல்ல, கருநாடக மாநிலத்திலிருந்து விஜயகுமார் ரெட்டி என்பவரும், தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி தலையை வெட்டிக் கொண்டு வருபவருக்கு ரூ. ஒரு கோடி பரிசு தருவதாக அறிவித்துள்ளார். இவர் 'தென்னிந்திய விசுவ இந்து பரிஷத்' என்ற அமைப்பின் தலைவர்.*

*கருநாடகத்திலுள்ள 'டிவி7' எனும் தனியார் தொலைக்காட்சி, இதைத் தொடர்ந்து அறிவித்துக் கொண்டே இருந்தது. பெங்களூரிலிருந்து வெளி வரும் நாளேடுகளும் இந்தச் செய்திகளை வெளியிட்டுள்ளன.*

## தாராபுரம், பொள்ளாச்சி - திருவண்ணாமலையில்

# தொடரும் இரட்டைக் குவளை அவலம்

தலித் மக்களுக்கு தனிக் குவளை வைத்திருக்கும் தேனீர்க்கடைகள் பற்றி கழகச் செயல் வீரர்கள் தயாரித்துள்ள பட்டியல்:

**தாராபுரத்தில்**
- அர்ஜுனன் டீக்கடை, எலுகாம்வலசு
- மேட்டுக்கடை டீக்கடை, எலுகாம்வலசு
- பொன்னிவாடி
- பழனிகவுண்டன்வலசு
- பள்ளபாளையம்
- குள்ளந்தள்விலசு
- பகவான்கோயில்
- ராமசாமி டீக்கடை
- டி. குமாரபாளையம்
- கொளத்துப்பாளையம்
- கொட்டமுத்தாம் பாளையம்
- தேவநல்லூர்
- சோமனூத்து
- காங்கயம்பாளையம்
- மடத்துப்பாளையம் (உப்பாறு டேம்)
- சங்கரண்டாம்பாளையம்
- மூலனூர் கிராம பகுதிகள்.

**பொள்ளாச்சியில்**
- ஆறுச்சாமி, த.பெ. கண்ணப்பன், முள்ளப்பாடி.
- நாட்ராயன், த.பெ. ரத்தினம், பேருந்து நிலைய நிறுத்தம், முள்ளுப்பாடி.
- மாரியப்பன், த.பெ. அப்பச்சி கவுண்டர், கோதவாடி.
- நாச்சியப்பன், பட்டனம்
- சின்னப்ப கவுண்டர், ம.தி.மு.க. த.பெ.வேலுச்சாமி கவுண்டர், பட்டணம்.
- வேலுச்சாமித்தேவர், த.பெ. பய்யனத்தேவர், பட்டனம்.
- சிவகாமிக் கவுண்டர் மகன் செந்தில், கோடங்கிபாளையம்.
- சிவ.பொன்னான், த.பெ. குஞ்சப்பன், நல்லுட்டிபாளையம்.
- பார்வதி, க.பெ.நாகராஜ், நல்லுட்டிபாளையம்.
- லட்சுமி, க.பெ.சுந்தரப்பன், நல்லுட்டிபாளையம்.
- விஜயாசின்னச்சாமி, நல்லுட்டிபாளையம்.
- ரத்தினம் வீரமுத்து, கோவிந்தாபுரம்.
- பாக்கியம் மகள் விஜயா, கோவிந்தாபுரம்.
- பாலு, த.பெ.சின்னச்சாமி, கோவிந்தாபுரம்.
- ராஜம்மாள், க.பெ. ரத்தினசாமி, கோவிந்தாபுரம்.
- பெரியப்பன் மகன் ஜெகதீஸ், கோவிந்தாபுரம்.
- போண்டா முருகன், ஆர்.எஸ். ரோடு, தாமரைக்குளம்.
- பொன்னப்பதேவர் கார் நிறுத்தம், தாமரைக் குளம்.

**மேட்டுப்பாளையம் (சூலக்கல்)**
- ரஞ்சிதம்மாள்
- தண்டல் பழனியப்பன்.

**ஜமீன் காளியாபுரம்**
- தீபிகா டீ கடை
- சந்திரன் டீ கடை

**நல்லிக்கவுண்டன்பாளையம்**
- பாக்கியம்மாள்
- தங்கராசு

**வேலாயுதம் பாளயைம்**
- பெருமாள்சாமி
- சின்னுச்சாமிக் கவுண்டர்
- ஆறுச்சாமிக் கவுண்டர்

**சென்னியூர்**
- முருகன் டீ கடை
- சபரி டீ கடை
- ஐயப்பன் டீ கடை
- அமுக்காத்தாள்

**சென்றாம்பாளையம்**
- மயில்சாமிக் கவுண்டர்
- கோபால் போஸ்ட்மேன்

**ஆனைமலை ஒன்றியம் கிழக்குப் பகுதி**

**ரெட்டியாரூர்-டீ கடை**
- ஆறுச்சாமி
- கிட்டுச்சாமி

**அர்த்தனாரிபாளையம் - டீ கடை**
- சின்னப்பன்
- அமுதராஜ்
- செல்லமுத்து
- தெண்டபாணி
- கோபால்

**சென்னியப்பன் முடிதிருத்தகம்**
- கணேசு
- செந்தில்
- செல்லாத்தம்மன் கோவில்
- சென்னையாண்டவர் கோவில்

**கரியாஞ்செட்டிபாளையம்**
- காளிசுவரி நல்லதம்பி டீ கடை

**அனைத்துக் கடைகளிலும்**
- கம்பாளபட்டி
- கோடங்கிபட்டி
- பில்சின்னாம்பாளையம்
- தொண்டாமுத்தூர்
- பருத்தியூர்

**வடக்கு ஒன்றியம்**

**செட்டிபுதூர்-டீக்கடை**
- செட்டியார் கடை
- நாடா கடை

**கப்பளாங்கரை-டீக்கடை**
- அப்பண்ணன் செட்டியார்
- மளிகைக்கடை செட்டியார்
- வத்தண செட்டியார்

**எம்மேகவுண்டன் பாயைம்-டீக்கடை**
- நாச்சம்மாள்
- தாஸ் தேவர் கடை

**செட்டிக்காபாளையம்-டீக்கடை**
- பழனிச்சாமி
- நடராஜ்

**சூலக்கல் - டீக்கடை**
- தனம்
- செந்தில்
- மாரிமுத்து

**கொண்டம்பட்டி-டீக்கடை**
- சந்திரசேகர்
- கருப்புசாமி
- லட்சுமி நடராஜ்
- முத்து வன்னியர்
- ஆனந்த் தேவர்
- சாமிநாதன்
- சண்முகசுந்தரம்

**திருவண்ணாமலை**

**தண்டாரம்பட்டு ஒன்றியம், ரெட்டியார் பாளையம் கிராமம் - டீக் கடை**
- கருணாநிதி
- வெங்கடேசன்
- பாலமுருகன்
- ராசா-பங்காருராஜ்
- ரவி-பங்காருராஜ்
- ஜம்பு-பங்காருராஜ்
- சிவசக்தி

**சின்னியம்பேட்டை கிராமம்-டீக்கடை**
- அம்பிகா, ஏழுமலை
- சங்கர்-பிச்சாண்டி
- வேலாயுதம்
- காசி-குப்பன்

**மோத்தக்கல் கிராமம்**
- சேகர்-வட்டு
- சிற்றரசு-ரேணு
- பருசன்
- குணா
- ராசேந்திரன்
- ராசேந்திரன்-லட்சுமணன்
- பொன்னுவேல்-கோவிந்தன்

**தென்முடியனூர் கிராமம்**
- சாமியார்-சண்முகம்
- சந்திரன்
- அருணாச்சலம்
- சேகர்
- குப்பன்-ஆறுமுகம்
- பொன்னுச்சாமி

**போந்தை கிராமம்**
- கிருஷ்ணன்
- பலராமன்
- அருள்
- காசியம்மா
- ஜெயமணி
- தொப்பை

**துரிஞ்சாபுரம் ஒன்றியம்-தேவனாம்பட்டு கிராமம்**
- அன்பழகன்-கிருஷ்ணன்
- முருகன்-அண்ணாமலை
- துரை-ராஜகண்ணு
- குமார்-கிருஷ்ணன்

**வெளங்கநந்தல்கிராமம்**
- கண்ணன்-தனபால்

**தண்டாரம்பட்டி ஒன்றியம் ரெட்டியார்பாளையம் - முடித்திருத்தகம் கடை**
- காமராஜ்-சஞ்சீவி
- முத்துகிருஷ்ணன்-வரதன்
- கண்ணன்-பாண்டியன்
- நாராயணன்-சஞ்சீவு
- சண்முகம்-பூங்காவனம்
- வெங்கடேசன்-அண்ணாமலை

**சின்னியம்பேட்டை கிராமம்**
- சேகர்-அர்சுணன்
- குமார்
- பழனி

**போத்தக்கல்கிராமம்**
- முனுசாமி
- ஏழுமலை-மோடி
- அறிவழகன்-பண்டீதம்
- ராமலிங்கம்

**கோயில்கள்**
- கெங்கையம்மன் ஆலயம்

**தென்முடியனூர்கிராமம்**
- முத்துமாரியம்மன் கோயில்

**துரிஞ்சாபுரம் ஒன்றியம் - சொரக் கொளத்தூர் கிராமம்**
- திரௌபதியம்மன் கோயில்

# சங்பரிவார்களுக்கு எச்சரிக்கை: கோவையில் கழகம் ஆர்ப்பாட்டம்

கருநாடக மாநிலம், பெங்களூரில் தமிழக முதல்வரின் மகள் வீட்டில் பெட்ரோல் குண்டுவீசி கொலை வெறித் தாக்குதல் நடத்தியும், தமிழக அரசு பேருந்து ஒன்றை இந்துமத வெறியர்கள் எரித்ததில் 2 தமிழர்கள் கருகி இறந்த கொடுமையைக் கண்டித்து, கோவையில் கழகம் ஆர்ப்பாட்டம் நடத்தியது. செஞ்சிலுவை சங்க கட்டிடம் முன் 20.9.2007 அன்று காலை 11 மணிக்கு, கழக ஆட்சிமன்றக் குழு உறுப்பினர் வெ. ஆறுச்சாமி தலைமையில் ஆர்ப்பாட்டத்தில் சங்பரிவார் கும்பலைக் கண்டித்தும், சேது சமுத்திரத் திட்டத்தை உடனடியாக முடித்திடக் கோரியும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன.



கோவையில் 17.9.07 தந்தை பெரியாரின் 129வது பிறந்தநாள் விழா எழுச்சி விழாவாக நடை பெற்றது. அன்று காலை 9 மணிக்கு காந்திபுரத் திலுள்ள அய்யாவின் சிலைக்கு கழகப் பொதுச் செயலாளர் கு.இராமகிருட்டிணன்,.ஊரக தொழிற் துறை அமைச்சர் பொங்கலூர் நா. பழனிச்சாமி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு. இராமநாதன், ஆட்சிக்குழு உறுப் பினர் வெ. ஆறுச்சாமி ஆகி யோர் மாலை அணிவித்தனர். பின்னர் கழக அலுவலகமான பெரியார் படிப்பகத்தில் குருதிக் கொடை முகாமை அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமி தொடங்கி வைத்தார். கோவை மாநகராட்சியின் துணை மேயர் நா. கார்த்திக் தொடர் குருதிக் கொடையாளர்களுக்கு பாராட்டு விருது வழங்கினார். பின்னர் நடந்த விழாவிற்கு மாநகரத் தலைவர் ம.ரே.ராசக் குமார் வரவேற்புரை நிகழ்த்தினார். மாநகர செய லாளர் வே. கோபால் தலைமை வகித்தார். விழாவில் கழகப் பொதுச்செயலாளர் கு. ராமகிருட்டிணன், அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு. இராமநாதன், துணை மேயர் நா.கார்த்திக், விடுதலை சிறுத்தைகள் மாநில துணைப் பொதுச்செயலாளர் சுசி. கலையரசன், தி.மு.க. அவைத் தலைவர் சவுந்திரராசன், மதிமுக அவைத் தலைவர் என்.கே.ராமகிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட துணைச் செயலாளர் ஆர். தேவராசு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி வடக்கு மண்டலத் தலைவர் சி. பத்மநாபன்,ஆதித் தமிழர் பேரவை அவைத் தலைவர் களப்பிரர் மற்றும் பலர் பேசினர். முடிவில் அலுவலக பொறுப்பாளர் சா. கதிரவன் நன்றி கூறினார். குருதிக் கொடை முகாமில் 50 தோழர்கள் குருதிக் கொடை யளித்தனர். 350 பேருக்கு பிரியாணி உணவை காட்டூர் பகுதி கழகத்தோழர்கள் வழங்கினர். காந்திபுரம் பகுதி முழுவதும் கழகக் கொடியாக காட்சியளித்தது. ஏராளமான பொதுமக்களும் விழாவில் பங்கேற்றனர். கழக நூல்கள் ஏராளமாக விற்பனையானது. கல்லூரி, பள்ளி மாணவர்களும் பெருமளவில் விழாவில் பங்கேற்றனர்.

**செய்தி : சா. கதிரவன்**

## அணுசக்தி ஒப்பந்தத்தின் பின்னணி (3)

# அமெரிக்கா ஈரானைக் குறி வைப்பது ஏன்?

அமெரிக்க - இந்திய அணுசக்தி ஒப்பந்தம் ஏதோ அணு மின்சாரம் தயாரிப்புக்கான ஒப்பந்தமாக மட்டுமே கருதிவிடக் கூடாது. இதற்கு வேறு பல பரிமாணங்கள் உண்டு.

இந்த ஒப்பந்தம் உருவாவதற்கு முன்பு இந்தியாவின் வெளியுறவுத் துறை அமைச்சரும், வங்காளப் பார்ப்பனருமாகிய பிரணாப் முகர்ஜி 2005 ஜூன் 28-ல் அமெரிக்காவுடன் ஒரு ரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டார். அது இராணுவ ஒப்பந்தம். இந்த ஒப்பந்தம் என்ன கூறுகிறது?

பன்னாட்டு ராணுவ நடவடிக்கைகளில் அமெரிக்க ராணுவமும், இந்திய ராணுவமும் இணைந்து பணியாற்றும். (இதன்படி - அமெரிக்கா, தன்னிச்சையாக - மேலாதிக்க வெறியோடு மேற்கொள்ளும் ராணுவ நடவடிக்கைகளுக்கு இந்தியாவும் துணைப் போக வேண்டியிருக்கும்)

ஏவுகணைகள் தயாரிப்பில் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் உடன்பாடு.

இது தவிர, இப்படி ஒரு ராணுவ ஒப்பந்தத்தை 2005-ல் உருவாக்கிக் கொண்டு, அதன் தொடர்ச்சியாக 2007-ல் அணுசக்தி ஒப்பந்தத்தை உருவாக்கியுள்ளார்கள். அமெரிக்க இந்திய ராணுவ ஒப்பந்தத்தின் தொடர்ச்சிதான் - அணுசக்தி ஒப்பந்தம் என்பதை பிரதமர் மன்மோகன்சிங்கே, 'இந்தியா டுடே' இதழுக்கு அளித்த பேட்டியில் ஒப்புக் கொண்டுள்ளார்.

இப்படி இந்தியாவுடன் ராணுவ ரீதியாக அமெரிக்க ஒப்பந்தம் போட ஏன் துடிக்கிறது?

ஆசியாவின் மிகப் பெரிய நாடான இந்தியாவை தனது வலைக்குள் கொண்டு வந்து, அமெரிக்காவுக்கு போட்டியாக வளர்ந்து கொண்டிருக்கும் மற்றொரு ஆசிய நாடான சீனாவை அச்சுறுத்துவது; மேற்கு ஆசியாவில் ஈராக்கைத் தொடர்ந்து ஈரான் நாட்டில் தலையிடுவது. அதற்காக ஈரானிடம் - இந்தியாவின் நல்லுறவை முறிப்பது - இதுவே முக்கிய நோக்கம்.

ஈரான் மீது அமெரிக்காவுக்கு ஏன் அவ்வளவு கோபம்? இதற்கான விடையை சுருக்கமாகப் பார்ப்போம்.

மேற்கு ஆசியாவில் உள்ள நாடான ஈரான் அணுசக்தி ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது. அணு மின்சாரத்தையும் தயாரித்து வருகிறது. அதற்குத் தேவையான மூலப்பொருள் செறிவூட்டப்பட்ட யுரேனியம். (யுரேனியத்தில் அடங்கியுள்ள மிகக் குறைந்த அளவில் உள்ள அணுசக்தியின் ஆற்றலை அதிகப்படுத்தும் தொழில்நுட்பத்துக்கு செறிவூட்டுதல் என்று பெயர்)

இந்த செறிவூட்டப்பட்ட யுரேனியத்தைக் கொண்டு, அணுகுண்டும் தயாரிக்கலாம். ஏற்கனவே, 'அணு ஆயுத பரவல் தடை' ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள நாடு ஈரான். எனவே ஒப்பந்தத்துக்கு எதிராக - ஈரான், செறிவூட்டப்பட்ட யுரேனியத்தைப் பயன்படுத்தி, அணுகுண்டு தயாரிப்பதாக அமெரிக்கா குற்றம் சாட்டியது. சர்வதேச அணுசக்தி கழகத்திடம் அமெரிக்கா தொடர்ந்து புகார் கூறியது. சர்வதேச அணுசக்தி கழகத்தின் விஞ்ஞானிகள் ஈரானில் பல மாதங்கள் தங்கி, சோதனைகள் நடத்தினர். அணுகுண்டு தயாரிக்கப்படுகிறது என்பதற்கான எந்தத் தடயமும் கிடைக்க வில்லை. ஈரான் நாட்டில் அணு ஆயுதம் எதுவும் தயாரிக்கப்படவில்லை. அந்த நாட்டினால் எந்த ஆபத்தும் இல்லை என்று விஞ்ஞானிகள் வெளிப்படையாகவே அறிவித்தனர். சர்வதேச அணுசக்தி கழகத்தின் தலைவராக இருந்தவர் பெயர் முகம்மது எல்பராடி என்பதாகும். இரண்டு முறை இதன் தலைவர் பதவியில் இருந்த அவரின் பதவிக்காலம் 2005-ன் இறுதியில் முடிவடைய இருந்தது. மூன்றாவது முறையும் பதவியில் நீட்டிக்க அவர் விரும்பினார். ஆனால், ஈரானில் அணு ஆயுதம் இல்லை என்று அறிவித்து விட்டதால், கோபமடைந்த அமெரிக்கா, அவர் பதவியில் நீட்டிப்பதை விரும்பவில்லை. அவரது பதவி நீட்டிப்பை எதிர்த்தது. திடீரென எல்பராடி தனது குரலை மாற்றிக் கொண்டார். ஈரானுக்கு ஆதரவாக உண்மையைப் பேசிய அவர், பிறகு குரலை மாற்றிக் கொண்டு, "ஈரான் சோதனைக்கு முழுமையாக ஒத்துழைக்கவில்லை. நாங்கள் மேலும் பல இடங்களில் சோதனை நடத்த அனுமதிக்க வேண்டும். வெளிப்படையாக ஒளிவு மறைவின்றி ஈரான், தன்னை வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும்" என்று அறிவித்தார். இந்த அறிக்கையின் அடிப்படையில்தான் கடந்த 2006 ஆம் ஆண்டு செப்டம்பர் 24 ஆம் தேதி, சர்வதேச அணுசக்தி கழகத்தில் ஈரானுக்கு எதிராக அமெரிக்கா தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றியது. இந்தியாவும் ஈரானுக்கு எதிராக வாக்களித்தது. இந்தியாவின் இந்த முறைகேடான முடிவுக்குக் காரணம் - இந்தியாவும், அமெரிக்காவும் உருவாக்கிக் கொண்ட பாதுகாப்பு ஒப்பந்தம்தான். அதன் பிறகு அமெரிக்க விருப்பப்படி செயல்பட முன் வந்த அணுசக்தி கழகத்தின் தலைவரின் பதவியும் - மூன்றாவது முறையாக நீடிக்க அமெரிக்காவும் அனுமதித்தது.

ஈரான் மீது அமெரிக்கா குறி வைப்பதற்கான முக்கிய காரணம் - அந்நாட்டின் எண்ணெய் வளமாகும்.ஈரானின் எண்ணெய் இருப்பு 12580 கோடி பேரல்கள். இது ஈராக்கைவிட அதிகம். சவுதி அரேபியாவுக்கு அடுத்து அப்பகுதியில் எண்ணெய் வளம் அதிகம் உள்ள நாடு ஈரான் தான். அதே போல் 940 லட்சம் கன அடி எரிவாயுவும் ஈரானில் இருக்கிறது. உலகிலேயே ரஷ்யாவுக்கு அடுத்தபடி அதிக எரிவாயுக் கொண்ட நாடு ஈரான் தான். இதனால் தான் ஈரானிலிருந்து பாகிஸ்தான் வழியாக இந்தியாவுக்கு குழாய் வழியாக எரிவாயு கொண்டு வரும் திட்டம் உருவாக்கப்பட்டது. இந்தத் திட்டம் அமுலாகும் போது பாகிஸ்தானுக்கும், இந்தியாவுக்குமிடையே உள்ள மோதல் போக்கு மறைந்து சுமூக உறவு உருவாகும் வாய்ப்புகள் இருந்தன. ஏற்கனவே இந்தியா-பாகிஸ்தான் இடையே அமைதியான உறவுக்கு பேச்சு வார்த்தைகள் தொடங்கியுள்ளன. இந்த நிலையில் இந்த எரிவாயு குழாய் திட்டத்தை அமெரிக்கா வெளிப்படையாகவே எதிர்த்தது. ஈரானிடமிருந்து இந்தியா பெறவிருந்த இந்த எரிவாயுத் திட்டத்தை முடக்கி, ஈரானைத் தனிமைப்படுத்தத் துடிக்கும் அமெரிக்கா, இப்போது தனது நோக்கத்தில் வெற்றி பெற்றுள்ளது. ஈரான்-இந்தியா குழாய் வழி எரிவாயுத் திட்டம், இப்போது பலிகடாவாக்கப்பட்டுள்ளது. இதற்காக இந்தியாவுக்கு அணு சக்தி தொழில்நுட்பத்தைத் தருவதாக அமெரிக்கா கூறுகிறது.

**எம்.கே. நாராயணன் சூழ்ச்சிகரமாக காய்களை வேறு தளத்துக்கு நகர்த்திவிட்டார். தமிழர்கள் மீண்டும் ஏமாளிகளாக்கப்பட்டுவிட்டனர்.**

ஈரானின் எண்ணெய் வளம் அமெரிக்காவை ஏன் உறுத்துகிறது என்பது ஒரு முக்கியமான கேள்வி! ஈரானின் எண்ணெய் வளம் - உலக எரி சக்தி சந்தையில் முக்கிய இடத்தை வகிக்கிறது. இது மேலும் வளரக்கூடிய வாய்ப்புகள் இருக் கின்றன. அமெரிக்காவின் பெரும் முதலாளிகள் பெருமளவில் இந்த சந்தையில் முதலீடு செய்து சந்தையைத் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர விரும்புகிறார்கள். ஆனால் ஈரானோடு வர்த்தகம் செய்வதற்கு அமெரிக்கா தடை செய்துள்ளது. அதே நேரத்தில் ரஷ்யாவும், சீனாவும், ஈரானோடு வர்த்தகம் செய்கின்றன. இந்த நாடுகளின் வர்த்தகத் தொடர்புகளால் ஈரானுக்கு, பல கட்டமைப்பு வசதிகள் கிடைக்கின்றன. இதனால் - அடுத்த பத்தாண்டுகளில் ஈரான் தலைநகரில் 'ஆசிய எரிசக்தி பாதுகாப்பு அமைப்பு' ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சிகள் நடக்கின்றன. அந்த நிலை வரும்போது உலக எண்ணெய் விநியோகத்தில் மேற்கத்திய நாடுகளின் ஆதிக்கம் உடையும். ஈரானும் தன்னுடைய எண்ணெய் வர்த்தகத்தின் பெரும் பகுதியை ஆசியாவின் பக்கமே திருப்பிவிட விரும்புகிறது. இதன் மூலம் எரிசக்தித் துறையில், அமெரிக்க ஆதிக்கம் குறையும்.

இதனால் அமெரிக்காவின் பொருளாதாரத்துக்கு நெருக்கடி உருவாகும் ஆபத்துகளும் இதில் இருக்கிறது. அது என்ன தெரியுமா?

இப்போது எண்ணெய் வர்த்தகத்தில் அமெரிக்காவின் நாணயமான டாலர் தான் பயன் படுத்தப்படுகிறது. இதற்கு காரணம் என்ன தெரியுமா? இரண்டு முக்கியமான எண்ணெய் சந்தைகள் நியுயார்க்கிலும், லண்டனிலும் இருக் கின்றன. இந்த எண்ணெய்ச் சந்தைகளில், அமெரிக்காவின் நிறுவனங்களே ஆதிக்கம் செலுத்துகின்றன. எனவே வர்த்தகம் டாலரிலேயே நடக்கிறது.

அய்ரோப்பிய ஒன்றிய நாடுகளின் நாணயம் யூரோ. இதன் மதிப்பு, அமெரிக்க டாலரைவிட அதிகமாகிவிட்டது. ஏற்கனவே சில நாடுகள் டாலரை விட்டுவிட்டு 'யூரோ'வில் எண்ணெய் வர்த்தகம் செய்யத் தொடங்கிவிட்டன. ஈரானும், தனது வர்த்தகத்தில் ஒரு பகுதியை 'யூரோ'வில் நடத்துகிறது. இந்த நிலையில் தான் நாம் மேற்குறிப்பிட்டபடி, நியுயார்க், லண்டனில் உள்ள பெரும் எண்ணெய் சந்தையைப் போல் - ஈரானும்,தனது நாட்டில் டெஹ்ரானில் ஒரு எண்ணெய் வர்த்தக சந்தையை உருவாக்கி டாலரைத் தவிர்த்து, இதர நாணயங்களில், குறிப் பாக யூரோவில் வர்த்தகம் செய்ய திட்டமிடுகிறது. இது நடந்தால், டாலரின் தேவை வெகுவாகக் குறைந்து போய்விடும். ஏற்கனவே வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கும் டாலர் மேலும் வீழ்ச்சியடைந்து, அமெரிக்காவின் பொருளாதாரம் கடும் நெருக்கடிக்கு உள்ளாகிவிடும்.

ஈரான் மீது - அமெரிக்கா பகைமை பாராட்டு வதற்கு, இவை எல்லாம் காரணங்கள்!

இந்தப் பின்னணியில் தான், ஆசியப் பகுதியில் இந்தியாவை தனிமைப்படுத்தி, இராணுவப் பாதுகாப்பு அணுசக்தி ஒப்பந்தங்களை செய்து கொண்டு - இந்தியாவை தனது பிடிக்குள் கொண்டு வந்திருக்கிறது அமெரிக்கா! இதன் மூலம் - 'அணி சேரா கொள்கை' என்று இதுவரை பசப்பி வந்த இந்தியா, இப்போது, அமெரிக்காவின் காலடியில் போய் விழுந்திருக்கிறது.

அமெரிக்க-இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் ஏற்பட்டதால்தான், அணு ஆயுதங்களை நிரப்பிக் கொண்டு 'நிமிட்ஸ்' கப்பல் சென்னை துறை முகத்துக்கு வந்தது. ஈராக் மக்கள் மீது குண்டுகளை வீசியது இதே கப்பல் தான். இந்த ஒப்பந்தத்தின்படி வங்கக் கடல் பகுதியில் அமெரிக்காவின் தலைமையில், கூட்டுக் கடற்படைப் பயிற்சியை இந்தியா நடத்தி முடித்துள்ளது. அமெரிக்காவோடு, ஆஸ்திரேலியா, ஜப்பான் நாட்டின் கடற்படைகளும் இதில் பங்கேற்றன. இதில் பங்கேற்க 13 யுத்தக் கப்பல்கள் வங்கக் கடலுக்கு வந்தன. இதில் பெரும்பாலானவை - இந்தியாவுடன் நட்புக் கொண்டுள்ள நாடுகளைத் தாக்க, அமெரிக்காவால் பயன்படுத்தப்பட்டவையாகும்.

வங்கக் கடலில் - சிறீலங்காவின் ராஜபக்சே ஆட்சி, இந்திய கடல்படையுடன் கூட்டு ரோந்து நடத்த விரும்பியது. இதன் மூலம் தமிழ் ஈழப் போராளிகளை கடல்பகுதிகளில் ஒதுக்கிவிட முடியும் என்று, சிறீலங்கா அரசு திட்டமிட்டது. முன்னாள் உளவுத் துறை அதிகாரியும் - பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகருமான எம்.கே. நாராயணன் 'மூளையாக' இருந்து உருவாக்கிய இத்திட்டம், தமிழகத்தில் எழுந்த எதிர்ப்பின் காரணமாகக் கைவிடப்பட்டது. அதே எம்.கே. நாராயணன் - இப்போது அமெரிக்க - இந்திய ஒப்பந்தங்களின் மூளையாக செயல் படுகிறவர்களில் ஒருவர். இப்போது வங்கக் கடல் பகுதியில் - அமெரிக்கப் போர்க் கப்பல்களே வரத் தொடங்கிவிட்டன. எம்.கே. நாராயணன், சூழ்ச்சிகரமாக காய்களை வேறு தளத்துக்கு நகர்த்தி விட்டார். தமிழர்கள் மீண்டும் ஏமாளி களாக்கப்பட்டுவிட்டனர்.

சரி, இந்திய - அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்தை உருவாக்க பின்னணியாக இருக்க செயல்பட்டவர்கள் யார்? யார்?

**(அடுத்த இதழில்)**

# வா, 'ராமா' வா!



அடே, ராமா, கோதண்டராமா!

நீ எங்கேயடா, போனாய்?

உன் பெயரால் - 'அமளி துமளி' நடக்கிறதே, உன் காதுகளில் விழவில்லையா?

நீ அயோத்தியில் தான் பிறந்தாயா?

கடலுக்கு அடியில் பாலம் கட்டியது நீ தானா?

மீண்டும் ஒரு 'அவதாரம்' எடுத்து வந்து, உண்மையை சொல்லக் கூடாதா?

இந்த 'ராம நிந்தனை'யாளர்களின் வாயை அடைக்கக் கூடாதா?

நீ வராவிட்டாலும், உனது குரங்குப் பட்டாளத்தையாவது அனுப்பக் கூடாதா?

காலம், காலமாக 'ஸ்ரீ ராமஜெயம்' எழுதி எழுதி, கையொடிந்தே போய் விட்டோம்!

உனக்கு உண்மையான சக்தி இருந்தால் நீ ஆண்டவனின் அவதாரம் என்பது உண்மையானால், மீண்டும் அவதாரம் எடுத்து வா!

உன்னை எதிர்ப்பவர்கள்மீது 'அம்புறாத் தோணியிலிருந்து' வில்லை எடுத்து விடு!

இல்லாவிட்டால் மரத்தில் பதுங்கிக் கொண்டு வாலியை வதம் செய்தது போல் 'ராம நிந்தனை'யாளர்களை வதம் செய்! சூத்திர சம்பூகன் தலையை வெட்டியது போல் - இந்த 'அசுரர்'களின் தலையை வெட்டு!

நீ வராவிட்டால் ராமன் இல்லை என்பது உறுதியாகிவிடும்! பிறகு எங்கள் பிழைப்பில் மண் விழுந்து விடும்!

ராமா, நீ நேரில் வருவதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும்? சொல்!

காவல் நிலையத்தில் புகார் செய்ய வேண்டுமா?

வானொலி, தொலைக்காட்சியில் விளம்பரம் செய்ய வேண்டுமா? அல்லது,

நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்ய வேண்டுமா?

உனக்கு அத்தனை சுகங்களும் - பூலோகத்தில் இருக்கிறது!

மணமணக்க - சூடான மாட்டிறைச்சி - சீனர்கள் ஓட்டல்களில் உண்டு!

டாஸ்மாக் கடைகளில் 'சோமபானம், சுராபானம்' உண்டு!

வா ராமா! வா! தயங்காமல் வா! எங்களை ஏமாற்றாமல் வா!

- இப்படிக்கு

**வழி மேல் விழி வைத்து காத்திருக்கும் ஓர் இராம பக்தன்.**

# இராமனைக் கொளுத்தச் சொன்னேன் - சொல்கிறேன்!

## - தந்தை பெரியார் -

ஆத்திகப் பிரச்சாரமும், பக்திப் பிரச்சாரமும் செய்யும் பார்ப்பனத் தலைவர் திரு. இராஜாஜி அவர்கள் 'இராமன் கடவுள்அல்லன், அவன் ஒரு வீரன்' என்று 'சக்ரவர்த்தித் திரு மகனார்' என்ற தமது கட்டுரையில் தெளிவாக எழுதியிருக்கிறார்.

சங்கராச்சாரியாரும், 'இராமன் கடவுள் அல்லன், ஓர் ஆதர்சன புருசன். மக்களுக்கு ஒழுக்கத்தைக் கற்பித்தவன்' என்று கூறி இருக் கிறார்.

காலஞ்சென்ற மறைமலைஅடிகள், டி.கே.சி., திரு.வி.க., வி.பி. சுப்பிரமணியப் பிள்ளை, பி. சிதம்பரம் பிள்ளை முதலிய புலவர்கள், ஆராய்ச்சியாளர்கள், 'இராமன் கடவுள் அல்லன், இராமாயணம் கடவுள் கதை அல்ல' என்று கூறி இருக்கிறார்கள்.

வால்மீகியும் தமது இராமாயண இலக்கியத்தில், 'இராமன் பெண்ணைக் கொன்றவன். பெண்ணை மான பங்கப்படுத்தியவன். மறைந்திருந்து எதிரிகளைக் கொன்றவன், துரோகக் காரியங் களுக்கு உடைந்தையாக இருந்தவன்' என்றெல்லாம் கூறியிருக்கிறார். இவ்வளவு தானா?

காந்தியாரே, 'நான் போற்றும் இராமன் இராமாயண இராமன் அல்ல என்றும், 'காட்' என்று சொல்லும் படியான உருவமற்ற, பெயர்ச்சொல் அல்லாத அதாவது, ஒரு வஸ்து அல்லாத சர்வசக்தியான இராமன் என்றும் கூறி இருக்கிறார்.

ஆகவே, நானும் இராமாயணப் பாத்திரங்களில் ஒன்றான இராமாயண இராமனிடம் கடவுள் லட்சணப்படி ஏதாவது கடவுள் தன்மையோ, ஒழுக்கமோ, நாணயமோ, சாதாரண அறிவோ இருக்கின்றதா என்றும், இல்லா விட்டாலும் துரோகம், வஞ்சகம், பேடித்தனம், பேராசை, உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுதல் முதலிய கூடா ஒழுக்கக் குணங்கள் என்பவைகளாவது இல்லாமல் இருக்கிறதா என்றும் துருவித் துருவி பார்த்து, இல்லை என்ற முடிவுக்கே வந்திருக்கிறேன்.

ஆகவே, அப்படிப்பட்ட ஒருவனை மக்கள் கடவுளாக, வழிகாட்டியாக, பிரார்த்தனை, பக்தி செலுத்தத் தக்க வனாகக் கருதக் கூடாது என்பதற் காகவே, "இராமாயண இராமனைக் கொளுத்துங்கள்" என்றேன்.

"இம்மாதிரிக் குணங்கள்" இல்லாத இராவணன் கொளுத்தப்பட்டான். ஆண்டுதோறும் கொளுத்தப்படு கிறான். இன்னும் ஆண்டுதோறும் மதுரை முதலிய இடங்களில் சமணர் கழுவிலேற்றப்பட்ட உற்சவம் ஆண்டு தோறும் நடைபெற்று வருகிறது. மற்றும், தமிழ்நாட்டில் நூற்றுக் கணக்கான சைவக் கோயில்கள் உள்ள இடங்களில் 'சூரசம்மார' உற்சவங்கள் நடைபெறுகின்றன.

இவை குறித்து அனேகருக்கு வெகுநாட்களாக மனவேதனை இருந்து வந்தும், அவற்றைச் சரியானபடி வெளியாக்கித் தடுக்க இதுவரை மக்களுக்கு வாய்ப்பில்லா மல் இருந்து வந்தது.

இன்றைய தினம் எனது சமுதாயத் தொண்டின் முதலானதும், முக்கிய மானதுமான சாதி ஒழிப்பை எடுத்துக் கொண்டால், இராமனின் முதல் செய்கையும், கடைசிச் செய்கையும் சாதியைக் காப்பாற்றப் பிறந்து, சாதியைக் காப்பாற்றிவிட்டுச் செத்ததேயாகும். நமது நாட்டில் சமுதாயச் சீர்திருத்த வேலையோ, பகுத்தறிவுப் பிரசாரவேலையோ எந்த ஒரு சிறிய அளவுக்கு நடக்க வேண்டுமானாலும், முதல் இலட்சிய சொல்லாக, சுலோகச் சொல்லாக, துவக்கக் குறியாக 'இராமாயணம் - இராமன்' அழித்து ஒழிக்கப்பட்டாக வேண்டும். இராமாயணப் பிரச்சாரம் ஒழுக்கக் கேட்டுப் பிரசாரம் ஆகும். எவ்வளவுதான் மத மவுடீகம் மக்களுக்கு இருந்தாலும், ஒரு மனிதன் தன்னைப் பெற்ற தாய், இரண்டணா ரேட்டுக்கு குச்சிக் காரியாக இருந்து தெருவில் போகிற சின்னப் பசங்களை எல்லாம் கையைப் பிடித்து இழுத்தால், மகன்காரனாகிய மனிதன், இழுக்கப்பட்ட பையனைப் பார்த்து, "ஏண்டா, எங்கம்மா இழுத்தால் திமிரிக்கிட்டு ஓடப் பார்க்கிறாய்?' என்று பையனை அடித்தால் அவன் தாய்ப் பற்று, தாய் அன்பு, தாய் அபிமானம், தாய் பக்தி கொண்டவனாகிவிடுவானா?

உலகின் சாதாரண மக்களும் அந்த மகனைப் பற்றி என்ன கருது வார்கள் என்பதைச் சிறிது சிந்தித்துப் பார்த்தால், இராம பக்தர்களான தமிழர்களுக்கு நான் இராமனை எரிக்கும் தன்மையின் உண்மை விளங்காமல் போகாது. இம்மாதிரி 'தியாகிகள்' அதாவது, உயிருக்குத் துணிந்து உயிரினும் சிறந்ததான 'மானத்'தைத் துறந்து (மற்றவற்றைத் துறந்தது என்பது மிக மிக அற்பமேயாகும்) மக்கள் பழியை ஏற்று, இக்காரியதைச் செய்யக் கூடியவர்கள் எளிதில் ஏற்பட மாட்டார்கள். ஏற்பட்டா லும் முன்வரமாட்டார்கள். முன் வந்தா லும் மக்கள் அனுமதிக்க மாட்டார்கள். அனுமதித்தால் மாற்றார் வாழவிட மாட்டார்கள். தமிழனுக்கு இன்று தன்மானம் தேவை. இது தாயினும் உயிரினும் சிறந்ததாகும். தாயை வெறுத்தாவது, உயிரைவிட்டாவது, மானத்தை - மனிதத் தன்மையை - ஒழுக்கத்தைக் காப்பாற்ற இராமனைக் கொளுத்தச் சொன்னேன், சொல் கிறேன்.

## அமைச்சர் ராஜா தாயார் மறைவு: கழகத் தலைவர் துயரம் விசாரித்தார்

மத்திய இணையமைச்சர் ராஜாவின் தாயார் சென்னை அப்போலோ மருத்துவமனையில் மரணமடைந்த செய்தியறிந்து கடந்த செப்.17 ஆம் தேதி அமைச்சரின் சொந்த ஊரான பெரம்பலூருக்கு அருகே உள்ள வேலூரில் உள்ள அவரது இல்லத்துக்குச் சென்று, கழகத் தலைவர் கொளத்தூர் மணி, அமைச்சரை சந்தித்து துயரம் விசாரித்தார். கழக மாவட்ட அமைப்பாளர் இலக்குமணன் உடன் சென்றிருந்தார்.

# தமிழகத்தில் பார்ப்பனரல்லாத ‘இந்துக்கள்’ ‘ராமனை’ ஏற்க மாட்டார்கள்

முதல் பக்கத் தொடர்ச்சி

மூன்று வாதங்களை முன் வைக்கின்றனர். முதலாவதாக, ராமன் ‘சத்திரியன்’ எனும் ‘இருபிறப்பாளர்’ பிரிவில் வந்தவன். பார்ப்பன உணர்வில் மூழ்கியவன், அதனாலேயே சம்பூகன் என்ற சூத்திரன் தவம் செய்ததற்காக, சம்பூகனைக் கொன்றான். இதன் மூலம், பார்ப்பனர்கள் வலியுறுத்திய ‘குலதர்மத்தை’ உயர்த்திப் பிடித்தான். இரண்டாவதாக ராமன் ஒழுக்கசீலனும் அல்ல. காரணம் வாலியை நேரிடையாக அவன் கொல்லவில்லை, சூழ்ச்சியாக மறைந்திருந்து கொன்றான். அடுத்து, இராமாயணம் என்பதே, வடநாட்டார் தென்னாட்டவரை அடக்கியாண்டதைக் கூறும், கற்பனைக் கதை. மேற்குறிப்பிட்ட கருத்துகள் தமிழ்நாட்டின் பார்ப்பனரல்லாத இந்துக்களிடையே அழுத்தமாக எதிரொலித்துக் கொண்டிருக்கின்றன. “பார்ப்பனர்கள் - பார்ப்பனரல்லாதாரை ஏன் தொடர்ந்து வேற்றுமைப்படுத்தி, தாங்களே உயர்ந்தவர்கள் என்று கூறிக் கொள்ள வேண்டும்? ராமாயணத்தை விமர்சிப்பதை ஏன் தடுக்க வேண்டும்?” என்ற கேள்வியை - தமிழ்நாட்டின் பார்ப்பனரல்லாதார் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அத்துடன், ‘திராவிடர் அரசியல்’ மத அடையாளத்தைச் சார்ந்து நிற்கவில்லை. அது தமிழன், தமிழ், பார்ப்பனரல்லாதார் என்ற அடையாளங்களைத் தழுவித்தான் நிற்கிறது. இந்து, முஸ்லீம், கிறிஸ்தவர் என்று அனைத்து மதங்களைச் சார்ந்தவர்களின் ஆதரவு - திராவிடர் அரசியலுக்கு உண்டு. தமிழ்நாட்டில், மதம் பற்றிய பிரச்சினை எப்போதாவது வருகிறது என்றால், அதுகூட, மொழி, சாதி அடையாளங்களுக்காகவே தான் இருக்கும். உதாரணமாக, தமிழ்நாட்டில் கோயில் கர்ப்பகிரகத்துக்குள் பூசை செய்யும் உரிமை பார்ப்பனரல்லாதோருக்கு வேண்டும். வழிபாடு தமிழில் வேண்டும். சமஸ்கிருதத்தில் கூடாது என்பது, பார்ப்பனரல்லதாரின் கோரிக்கையாகும். எனவே, சாதி, மொழி, மாநிலங்களைக் கடந்த ‘ஏகத்துவ இந்து’வாக இருப்பதில், தமிழ்நாடு பார்ப்பனரல்லாதாருக்கு பிரச்சினைதான். அவர்கள் அதை ஏற்க மாட்டார்கள். எனவே பா.ஜ.க. கூறும் இந்து அடையாளத்தை - அதாவது, மொழி, இன அடையாளங்களைத் தவிர்க்கும் இந்து அடையாளத்தை பார்ப்பனரல்லாத தமிழர்கள், சந்தேகத்துடனேயே பார்ப்பதில் வியப்பு ஏதுமில்லை.

கருணாநிதி - தன்னுடைய பார்ப்பனரல்லாத இந்துக்கள் மீது உறுதியான நம்பிக்கை வைத்துள்ளார் என்றால், அந்த நம்பிக்கை தவறானது அல்ல. கடந்த காலத்தில் தமிழகத்தில் நடந்த நிகழ்வுகளே இதற்குச் சான்றாகும்.

1972 ஆம் ஆண்டு நடந்த சட்டசபை, நாடாளுமன்றத் தேர்தலையே சுட்டிக்காட்ட முடியும். இந்தத் தேர்தலுக்கு முன்பு, பெரியார் சேலத்தில், மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாடு ஒன்றை நடத்தினார். மாநாட்டின் ஒரு பகுதியாக ‘ராமன்’ கொடும்பாவி எடுத்து வரப்பட்டது. ஊர்வலத்தின் இறுதியில் ராமன் கொடும்பாவி எரிக்கப்பட்டது. இந்தப் படம், பத்திரிகைகளில் வெளி வந்தபோது, வட இந்தியாவில் கடும் எதிர்ப்பு எழுந்தது. அப்போது ‘ஜனசங்’ கட்சியில் இருந்த வாஜ்பாய், இதைக் கண்டித்து, “கோடிக்கணக்கான இந்துக்களைப் புண்படுத்தும் அவமானமான நிகழ்ச்சி” என்றார்.

சேலம் சம்பவத்தை, தேர்தல் அரசியல் லாபத்துக்கு அன்று காமராசர் தலைமையில் செயல்பட்ட பழைய காங்கிரஸ் பயன்படுத்தியது. காமராசர் தனது மதச்சார்பின்மை அடையாளத்தைக்கூட, கை கழுவிவிட்டு, இந்து வகுப்புவாதிகளுடன் கை கோர்த்துக் கொண்டார். அன்றைக்கு சுதந்திரா கட்சியின் தலைவராக இருந்த சி.இராஜகோபாலாச்சாரி தனது அரசியல் எதிரியான காமராசருடனிருந்த பகைமையை எல்லாம் புதைத்துவிட்டு, அவருடன் சேர்ந்து கொண்டார். “பூணூலை ஒரு கையில் பிடித்துக் கொண்டு, தி.மு.க.வுக்கு ஓட்டுப் போடுங்கள் என்று பார்ப்பனர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். இந்துமதவாத அமைப்புகளான ஜனசங்கம், ஆலயப் பாதுகாப்புக் கமிட்டி, ஆஸ்திக சமாஜம் போன்ற அமைப்புகள் தி.மு.க.வுக்கு எதிரான பிரச்சார இயக்கத்தை பத்திரிகைகளின் ஆதரவுடன் முடுக்கிவிட்டன. தி.மு.க. இந்து விரோதக் கட்சி என்ற பிரச்சாரம் தீவிரமாக நடந்தது.

ஆனால் தேர்தல் முடிவு பழைய காங்கிரசுக்கும் அதை ஆதரித்த இந்து வகுப்புவாத அமைப்புகளுக்கும் அதிர்சியளிப்பதாகவே இருந்தது. பழைய காங்கிரஸ் சார்பில் நாடாளுமன்றத்தில் போட்டியிட்டவர்களில் வெற்றி பெற்ற ஒரே வேட்பாளர் காமராசர் தான். தி.மு.க.வும் கூட்டணி கட்சிகளும், ஏனைய இடங்களைக் கைப்பற்றி விட்டன. தி.மு.க. பெற்ற பெற்றி - அதற்கு முன் எப்போதும் நிகழ்ந்திராத பெரும் பெற்றி. 234 இடங்களில் 184 இடங்களை தி.மு.க. கைப்பற்றியது. தமிழ்நாட்டின் மெஜாரிட்டி ‘இந்து’க்கள் தி.மு.க.வைத்தான் தேர்ந்தெடுத்தனர். ‘ராமனை’ புறக்கணித்தனர்.

இந்துவாக ஒருவர் இருப்பதற்கு - ஒற்றைப் பாதை மட்டுமே இல்லை. வெவ்வேறு பாதைகளில் - வழிகளில் - இந்துவாக வாழலாம். இதில் தமிழ்நாடு - தனித்துவமானது. வரலாற்றிலும் சரி, அரசியலிலும் சரி, தமிழ்நாட்டுக்கென்று தனித்துவம் உண்டு. தமிழ்நாட்டின் ஒரு சராசரி இந்து, தன்னுடைய மதத்தை ஏதேனும் ஒரு வழியில் ஏற்றுக் கொண்டு, பல்வேறு கொள்கைகளில் இந்து மதத்தோடு முரண்படுகிறார். சில கருத்துகளை ஏற்கிறார்கள். பல கருத்துகளை ஏற்க மறுக்கிறார்கள். அதாவது, இதை ஒரு சீர்திருத்தவாதியின் நிலை என்றே கூறலாம். தமிழகத்தைப் பொறுத்த வரை, இங்கு வாழும் இந்துக்கள் - சீர்திருத்தவாதிகளைப் போன்ற இந்துக்களாகவே இருக்கிறார்கள். கருணாநிதி ராமனை கேள்விக் குள்ளாக்கிக் கொண்டு, தனது அரசியல் செல்வாக்கை இழக்காமல் இருக்கிறார் என்றால், அதற்கான விடை, இந்த அடிப்படையான உண்மையில்தான் தங்கி நிற்கிறது. இவ்வாறு ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ கட்டுரை யில் எம்.எஸ்.எஸ். பாண்டியன் எழுதியுள்ளார்.

(பின் குறிப்பு : ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேட்டில் வெளிவந்துள்ள இக் கட்டுரை - தமிழ்நாட்டின் தனித் தன்மையைப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறது. கட்டுரையாளர் குறிப்பிடுவதுபோல் - சேலத்தில் பெரியார் நடத்திய ஊர்வலத்தில் ‘ராமன்’ கொடும்பாவி எடுத்து வரப்படவில்லை. வால்மீகி ராமயணத்தில் ராமன் பிறந்த கதை கூறப்பட்டிருப்பதை ஓவியமாகத் தீட்டி ஊர்வலத்தில் டிரக்கில் எடுத்து வரப்பட்டது. தோழர்கள் அந்தப் படத்தை செருப்பாலடித்து வந்தார்கள்.)


**(தலையங்கம் பார்க்க)**

## ராமாயணப் புரட்டு: பெரம்பலூரில் கொளத்தூர் மணி பேசுகிறார்

செப்.29 அன்று மாலை 6 மணியளவில் பெரம்பலூர் பழைய பேருந்து நிலையம் - காந்தி சிலை அருகில் பெரியார் திராவிடர் கழகம் சார்பில் இராமாயண புரட்டு விளக்க பொதுக் கூட்டம் நடைபெறுகிறது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றுகிறார். சா. பெருநற்கிள்ளி (தலைவர், திருவள்ளுவர் கல்வி சமூக நல அறக்கட்டளை) வழக்கறிஞர் பானுமதி உரையாற்றுகின்றனர். மாவட்டக் கழக அமைப்பாளர் இலக்குமணன் தலைமை தாங்குகிறார். சமர்ப்பா குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெறுகிறது. பெரியார் பிறந்த நாளையொட்டி, பள்ளி மாணவர்களுக்கு இலவச நோட்டு புத்தகங்கள் கழக சார்பில் வழங்கப்படுகின்றன.

முன்னதாக பெரம்பலூர் ‘ஜின்னா அரங்கில்’ பெரம்பலூர் மாவட்டக் கழகக் கலந்துரையாடல் கூட்டம், கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெறுகிறது.

## ‘ராம லீலா’வைத் தடை செய்



புதுடில்லியில் - ஒவ்வொரு ஆண்டும் ‘விஜயதசமி’ நாளன்று இராவணனின் உருவத்துக்கு தீ வைத்து, ‘இராம லீலா’ கொண்டாடுகிறார்கள். இராவணன் தீமையின் உருவம் என்கிறார்கள். ‘இராவணன்’ எரிப்பு - தென்னாட்டு மக்களை, பார்ப்பனரல்லாத திராவிடர்களை அவமதிப்பதாகும். இழிவுபடுத்துவதாகும். ‘ராமனை’ அவமதித்து விட்டதாக கலைஞர் தலைக்கு விலை வைக்கும் ‘ராமபக்தர்கள்’ இராவணனை எரித்து, தமிழர்களை இழிவுபடுத்தலாமா? இந்த நிகழ்வில் நாட்டின் உயர்ந்த பொறுப்பில் உள்ளவர்கள் பங்கேற்கலாமா? கடந்த ஆண்டு ‘இராம லீலாவில்’ சோனியா காந்தியே பங்கேற்றதை நாம் கண்டித்திருந்தோம். வாஜ்பாயும் அத்வானியும் இதில் பங்கேற்று வருகிறார்கள்.

அடுத்த வாரத்தில் - மீண்டும் டெல்லியில் ‘ராம லீலா’ அரங்கேறப் போகிறது. மத்திய அரசு, இதைத் தடை செய்ய வேண்டும்.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 2451 2857

பெரியார் திராவிடர் கழக
அலுவலக முகவரி:
1, காமராசர் சாலை,மயிலாப்பூர்,
சென்னை - 600 004.
தொலைபேசி 044-42702230

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 28th September 2007

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.